விலை: 50.00
பக்கங்கள் - 16

Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 145 வள்ளுவர் ஆண்டு 2056 சித்திரை 30 செவ்வாய்க்கிழமை (13.05.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/=

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியுடன்

## இணக்கம் ஏற்படுமாயின் தமிழரசுக் கட்சிக்கே அழுத்தம்

### கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

(யாழ்ப்பாணம்)

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியுடன் கொள்கை ரீதியில் நாம் இணக்கப்பாடு எட்டுவோமாயின் அது இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு அழுத்தத்தை ஏற்படுத்தும் எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு எதிராக நேற்று 15ஆம் பக்கம் பார்க்க

## இணையம் மூலம் மோசடி பொலிஸார் எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் இணையம் மூலம் மோசடிகள் அதிகரித்துள்ளன. இது தொடர்பில் பொதுமக்கள் அவதானத்துடன் இருக்குமாறு பொலிஸார் எச்சரித்துள்ளனர்.

வெசாக் பௌர்ணமி தினத்தை குறிவைத்து, பல்வேறு தொலைத் தொடர்பு நிறுவனங்களின் பெயர்களைப் பயன்படுத்தி மோசடிகள் இடம்பெற்று வருகின்றன.

அதற்கமைய, இலவச இணைய வசதிகள் மற்றும் 50 GB Data வழங்குவதாகக் கூறி, மோசடி தகவல் ஒன்று வேகமாகப் பரவி வருவதாகவும் இவை அனைத்தும் போலியானவை எனவும், அவ்வாறு தகவல்கள் வரும் செய 15ஆம் பக்கம் பார்க்க

# தையிட்டி திஸ்ஸ விகாரையை அகற்றக்கோரிப் போராட்டம்

விகாரைக்கு முன்பாக முள்ளிவாய்க்கால் கஞ்சி விநியோகம்






(யாழ்ப்பாணம்)

வலிகாமம் தையிட்டியில் அமைக்கப்பட்டுள்ள சட்டவிரோத விகாரையை அகற்றக்கோரி நேற்று போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தின்போது முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தையொட்டி விகாரைக்கு முன்பாக முள்ளிவாய்க்கால் கஞ்சியும் விநியோகிக்கப்பட்டது.

(15ஆம் பக்கம் பார்க்க)

முதல் மாவீரர்

## சங்கரின் தந்தை நேற்றுக் காலமானார்



(யாழ்ப்பாணம்)

ஈழப் போராட்டத்தில் வீரமரணமடைந்த விடுதலைப் புலிகளின் முதல் மாவீரரான சங்கரின் தந்தை செல்வச்சந்திரன் நேற்று 15ஆம் பக்கம் பார்க்க

## சுற்றுலாப் பேருந்து மீது யாழில் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் தென்னிலங்கை சுற்றுலாப் பயணிகளின் பேருந்து மீது நேற்றுத் திங்கட்கிழமை இரவு மோட்டார் சைக்கிளில் வந்த மூவர் தாக்குதலை மேற்கொண்டு விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

வேலணைப் பகுதியில் இருந்து யாழ்ப்பாண நகர் நோக்கிப் பயணித்த 15ஆம் பக்கம் பார்க்க

மன்னார் பேசாலைக் கடற்கரையில்

## ரூ.87 மில்லியன் பெறுமதியான 218 கிலோ கஞ்சா மீட்பு

(மன்னார்)

மன்னார் பேசாலை கடற்கரையில் 87 மில்லியன் ரூபாய் பெறுமதியான 218 கிலோ கஞ்சா நேற்று முன்தினம் கடற்படையால் மீட்கப்பட்டுள்ளது.

ஆளில்லாத கண்ணாடி இழைப் படகு ஒன்றிலேயே கஞ்சாப் பொதிகள் மீட்கப்பட்டுள்ளது.

இலங்கைக் கடற்படை பேசாலை கடற்கரை பிரதேசத்தில் நடத்திய தேடுதல் நடவடிக்கையின்போது, அந்தக் கடல் பகுதியில் சந்தேகத்திற் 15ஆம் பக்கம் பார்க்க

## இடப்பெயர்வு நிகழாவிட்டிருந்தால் நாம் முன்னேறிச் சென்றிருப்போம்



### மயிலிட்டியில் ஆளுநர் வேதநாயகன்

(யாழ்ப்பாணம்)

இடப்பெயர்வின் வலி எனக்கு நன்றாகத் தெரியும். நாம் எமது பகுதிகளை விட்டு இடம்பெயராமல் இருந்திருந்தால் இன்று நாம் எங்கேயோ முன்னேறிச் சென்றிருப்போம் என வட மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

மயிலிட்டியில் நேற்று நடைபெற்ற திறப்பு விழா ஒன்றில் கலந்து கொண்டு 15ஆம் பக்கம் பார்க்க

## ஊசி மூலம் அதிகளவு போதை இளம் குடும்பஸ்தர் மரணம்

### சாவகச்சேரி பொலிஸ் பிரிவில் சம்பவம்

(சாவகச்சேரி)

ஊசி மூலம் அதிகளவு போதைப்பொருளைச் செலுத்திய இளம் குடும்பஸ்தர் ஒருவர் மரணமடைந்துள்ளார்.

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மட்டுவிலில் நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் அதே பகுதியைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான 27 வயதான நபரே உயிரிழந்தவராவார்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு அவரை 15ஆம் பக்கம் பார்க்க

24 மணி நேரத்தில்

## நாடு முழுவதும் 360 பேர் கைது

(கொழும்பு)

கடந்த 24 மணிநேரத்தில் நாட்டில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 360 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

15ஆம் பக்கம் பார்க்க

## யாழில் வெசாக் கொண்டாட்டம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஸ்ரீ நாக விகாரையில் வெசாக் தின நிகழ்வு நேற்று விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

ஆரியகுளம் நாக விகாரைக்கு அண்மித்த பலாலி வீதி என்பன வெசாக் கூடுகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

15ஆம் பக்கம் பார்க்க

### கொத்மலை விபத்தில்
## காயமடைந்தவர்களை பார்வையிட்டார் பிரதமர்



(கொத்மலை)

கொத்மலை பஸ் விபத்தில் காயமடைந்தவர்களைப் பிரதமர் ஹரிணி அமரசூரிய வைத்தியசாலை சென்று பார்வையிட்டார்.

விபத்தில் காயமடைந்து சிகிச்சை பெற்று வரும் நோயாளிகளின் நிலைமைகளை நேரில் கண்டறிய பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய கம்பளை மற்றும் பேராதனை வைத்தியசாலைகளுக்கு நேற்று முன்தினம் விஜயம் செய்தார்.

அங்கு, தீவிர சிகிச்சைப் பிரிவுகளில் சிகிச்சை பெறும் நோயாளிகளுக்குத் தேவையான மருந்துகள் மற்றும் சிகிச்சை பெறும் அனைத்து நோயாளிகளுக்கும் உடனடி சிகிச்சை அளிக்கத் தேவையான வசதிகள் குறித்து பிரதமர் விசேட கவனம் செலுத்தினார்.

இங்கு ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளித்த பிரதமர்,

இது மிகவும் துன்பகரமான நிகழ்வு. இது போன்ற விடயங்களைத் தாங்கிக்கொள்வது மிகவும் கடினமானதாகும். சிறுவர்கள், பெற்றோர்கள், உறவினர்கள் மற்றும் நண்பர்களை இழந்திருப்பது வேதனையானது. எமது நாட்டில் தினமும் ஏராளமான போக்குவரத்து விபத்துகள் நடக்கின்றன. இவற்றைத் தடுக்க எமது போக்குவரத்து அமைச்சர் பெரும் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார் என்றார். (ம-4,7)

## யாழ்.மாவட்ட செயலகத்தில் வெசாக் தின நிகழ்வு



யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் ஒழுங்கமைக்கப்பட்ட வெசாக் தின நிகழ்வு மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று காலை 10 மணிக்கு மாவட்ட செயலகத்தில் சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் ஸ்ரீ நாக விகாரை விகாராதிபதி மீஹாஹ ஜந்துரே ஸ்ரீ விமல தேரோ கலந்து கொண்டு வெசாக் தினம் தொடர்பாக ஆசியுரை வழங்கினார். புத்த பெருமான் பிறந்த, ஞானம் பெற்ற மற்றும் சமாதியடைந்த தினமே வெசாக் பௌர்ணமி தினம் எனவும் உலகத்தின் அனைத்து மக்களும் தர்மத்தின் வழியில் வாழ வேண்டும் எனவும் பாவங்களிலிருந்து விலகியிருத்தல் வேண்டும் என்பதும் தர்ம போதனையாகும் எனவும் குறிப்பிட்டார்.

மேலும், உலகத்தில் உள்ள எல்லா மக்களிடையும் சாந்தி, சமாதானம் மற்றும் நல்லிணக்கம் வேண்டப்படுவதாகவும் புத்த தர்மத்தில் எல்லா மக்களும் சமம் என்பதையே புத்தபெருமானின் போதனை உணர்த்துகின்றது எனவும் குறிப்பிட்டார்.

இலங்கை வாழ் மக்களாகிய நாம் ஒற்றுமையாகவும் ஆரோக்கியமாகவும் இருக்க வேண்டும் என்று இந்த வெசாக் பௌர்ணமி தினத்தில் ஆசீர்வாதம் செய்வதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இந் நிகழ்வில் யாழ் மாவட்ட பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் YABM ஜகம்பத், மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) க.ஸ்ரீமோகனன், பிரதம கணக்காளர் எஸ்.கிருபாகரன், திட்டமிடல் பணிப்பாளர் இ.சுரேந்திரநாதன், உதவி மாவட்டச் செயலாளர் செல்வி உ.தர்சினி, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், மாவட்டச் செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள், இராணுவ அதிகாரிகள், பொலிஸ் உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொண்டனர். (ம-4,7,33)

## மற்றுமொரு பேருந்து விபத்து; 20 பேர் காயம்

நாட்டில் நேற்று மற்றுமொரு பேருந்து விபத்து பதிவாகியுள்ளது.

இந்த விபத்தில் சுமார் இருபது பேர் காயமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அலதெனிய யட்யான் கலப்பகுதியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

யாத்திரை சென்ற பேருந்தொன்றே பாதையை விட்டு விலகி இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவத்தில் காயமடைந்தவர்கள் பிரிகம, கண்டி மற்றும் பேராதனை மருத்துவமனைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்துத் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ம-4,7)

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர் கந்தையா மகாதேவன்
(தலைவர் - கூட்டுறவு சபை, யாழ்.மாவட்டம்,
தலைவர் - ஏழாலை மேற்கு ஸ்ரீ விநாயகர் ஐக்கிய நாணய சங்கம், போசகர் - முத்தமிழ் மன்றம் ஏழாலை)

கடந்த 13.04.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவர் அமரர் **கந்தையா மகாதேவன்** அவர்களது வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (13.05.2025) செவ்வாய்க் கிழமை காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற விருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று இந்நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

விழிசிட்டி வீதி,
சூராவத்தை, சுன்னாகம்.
(1127)
தகவல் :
குடும்பத்தினர்

மணிவிழா நாயகியை மனதார வாழ்த்துகின்றோம்

திருமதி இராஜநாயகி சிவலிங்கம் (SLTS-I)
பகுதித் தலைவர் - ஆரம்பக் கல்வி
(யா/ உரும்பிராய் சந்திரோதய வித்தியாலயம்)



சேவைக்காலம்
1. யா/உரும்பிராய் சந்திரோதய வித்தியாலயம் 1990.03.02 - 2010.04.30
2. யா/உரும்பிராய் றோ.க.த பாடசாலை 2010.05.03 - 2011.05.27
3. யா/உரும்பிராய் சந்திரோதய வித்தியாலயம் 2011.05.30 - 2021.01.14
4. யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம் 2021.01.15 - 2021.04.11
5. யா/உரும்பிராய் சந்திரோதய வித்தியாலயம் 2021.04.12 - 2025.05.13

ஆரம்பக் கல்விதனை
அழகாய் கற்பித்து
ஆலமரத்தின் விழுதுகள் போல்
ஆழமாய் மாணவர் மனதில்
பதியச் செய்த
ஆசிரிய நாயகியை
வாழ்க வாழ்க என
வாழ்த்துகிறோம்.

Best Wishes!

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
(அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள்)
யா/உரும்பிராய் சந்திரோதய வித்தியாலயம்
(4175)

## கொத்மலை பேருந்து விபத்து

# காயமடைந்த 44 பேருக்கு தொடர்ந்தும் சிகிச்சை



(கொழும்பு)

கொத்மலை - கெரண்டி எல்ல பகுதியில் இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்து ஒன்று பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் 22 பேர் உயிரிழந்துள்ளனர். இவ் விபத்தில் காயமடைந்த 44 பேரும் தொடர்ந்தும் சிகிச்சைபெற்று வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொத்மலை பிரதேச வைத்தியசாலை, நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலை, பேராதனை, கம்பளை மற்றும் நாவலப்பிட்டி ஆகிய வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறுபவர்களின் நிலை மிகவும் கவலைக்கிடமாகவுள்ளதாகவும் வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொத்மலை - கெரண்டி எல்ல பகுதியில் நேற்று முன்தினம் அதிகாலை 4.30 மணி அளவில் இந்த விபத்து இடம்பெற்றிருந்தது.

பேருந்தில் ஏற்பட்ட திடீர் இயந்திர கோளாறு காரணமாகவே விபத்து சம்பவித்துள்ளதாக பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (நி-8)

# நாட்டை முன்னேற்றுவதற்கு எவ்வித தடைகளும் கிடையாது

## ரில்வின் சில்வா தெரிவிப்பு

**(கொழும்பு)**

**நாட்டை முன்னேற்றுவதற்கு எவ்வித தடைகளும் கிடையாது என ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.**

இதுவரை காலமும் உள்ளூராட்சி மன்றங்களை நிறுவுவதில் சிக்கல்கள் காணப்பட்டதாகவும் தேர்தலுடன் அந்த தேவையும் நிறைவேறியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கிராமிய மக்களின் வறுமையை ஒழிப்பது, கிளீன் சிறிலங்கா திட்டத்தை அமுல்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்துவது இனி சுலபமானது.

இதுவரை காலமும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் செயற்பட்டு வந்த முறையை மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் உறுதி மொழி வழங்கியுள்ளார். (நி-8)



# அமைச்சரவையில் விரைவில் மாற்றம்?



(கொழும்பு)

இலங்கையில் அமைச்சரவையில் மாற்றம் செய்வது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பல்வேறு இன சமூகங்களையும், பிரதேசங்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் அமைச்சரவையில் பதவிகள் வழங்குவது குறித்து இந்தப் பேச்சுவார்த்தையில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

எவ்வாறெனினும் இந்த திருத்தங்கள் செய்வது குறித்து இதுவரையில் தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை.

அமைச்சரவையில் மாற்றம் செய்ய வேண்டியதன் அவசியம் வலியுறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நிறைவடைந்ததன் பின்னர் இந்த அமைச்சரவை மாற்றம் குறித்து உயர்மட்ட அழிப்படையிலான கலந்துரையாடல் நடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், அமைச்சரவை மாற்றம் தொடர்பில் அரசாங்கத் தரப்பில் இருந்து அதிகார பூர்வ அறிவிப்புக்கள் எதுவும் வெளியிடப்படவில்லை. (நி-8)

# 2,022 சுற்றுலாப் பயணிகளுடன் இலங்கை வந்த மலேசிய கப்பல்



(கொழும்பு)

மலேசியாவின் ஐடாஸ்டெல்லா சொகுசு பயணிகள் கப்பல் நேற்றுக் காலை கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது.

மலேசியாவிலிருந்து 2,022 சுற்றுலாப் பயணிகள் மற்றும் 628 பணியாளர்களுடன் குறித்த கப்பல் இலங்கைக்கு வருகை தந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கப்பலில் வருகைதந்த சுற்றுலாப் பயணிகள் கொழும்பு, பின்னவல, கண்டி மற்றும் நீர்கொழும்பு ஆகிய சுற்றுலாத் தளங்களுக்குச் செல்லவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# இந்தியா-பாகிஸ்தான் போர் நிறுத்தம்

## ஜனாதிபதி பாராட்டு

(கொழும்பு)

இந்தியா மற்றும் பாகிஸ்தான் இடையிலான போர் நிறுத்த உடன்பாட்டை வரவேற்பதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள அவர், இந்த தீர்மானமானது இரு தரப்பிலும் அப்பாவி உயிர்களைக் காப்பாற்றுவதற்கான ஒரு முக்கியமான ஒப்பந்தம் மட்டுமல்லாது, நிலையான அமைதி, பிராந்திய ஸ்திரத்தன்மையை அடைவதற்கான முதல் மற்றும் முக்கிய முன்னெடுப்பாகும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

ஒரு பெரிய பேரழிவு ஏற்படுவதற்கு முன்பு, இந்தியா மற்றும் பாகிஸ்தான் தலைவர்கள் நெருக்கடியைத் தீர்ப்பதற்குத் தோட்டாக்களுக்கு பதிலாக வார்த்தைகளைப் பயன்படுத்துவதற்குத் தீர்மானித்திருப்பது தங்கள் அறிவு ஞானத்தையும் இராஜதந்திரத் திறமையையும் வெளிப்படுத்தியுள்ளது.



நீண்டகாலப் பிரச்சினைகளுக்கு அமைதியான தீர்வு காண்பதற்கான ஒரு முக்கிய படியாக இந்தப் போர் நிறுத்த ஒப்பந்தம் இருக்கும் என இலங்கை நம்புகிறது.

இரு நாடுகளுக்கும் இடையிலான தொடர்ச்சியான கலந்துரையாடலுக்கு எமது ஆதரவை வழங்குவதோடு எமது காலப்பகுதியிலேயே பிராந்திய அமைதியை அடைவதற்குத் தேவையான எந்தவொரு பங்களிப்பையும் செய்யத் தயாராக இருப்பதாகவும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க உறுதியளித்துள்ளார். (நி-8)

# முட்டை விலையில் வீழ்ச்சி

(கொழும்பு)

சந்தையில் முட்டையின் விலை குறைவடைந்துள்ளதாக நுகர்வோர் தெரிவித்துள்ளனர்.

புத்தாண்டு பண்டிகை காலத்தில் முட்டைகள் அதிக விலைக்கு விற்கப்பட்டாலும், அண்மைய நாட்களில் ஒரு முட்டையின் விலை 26 மற்றும் 28 ரூபாவாக இருந்துள்ளது.

தற்போது நாட்டின் பல பகுதிகளில் முட்டைகள் 20 ரூபாய் முதல் 24 ரூபாய் விலையில் விற்கப்படுவதாகக் கூறப்படுகிறது.

அதன்படி, முட்டையின் விலை இந்த அளவுக்கு குறைவடைந்துள்ளதாகச் சந்தை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (நி-8)

# வட மாகாண யூடோ போட்டி
## முல்லை மாவட்டம் 2 பிரிவிலும் முதலிடம்





கிளிநொச்சி உள்ளக அரங்கில் வடமாகாண விளையாட்டு திணைக்களத்தால் கடந்த சனிக்கிழமை அன்று நடத்தப்பட்ட வடக்கின் 5 மாவட்டங்களும் பங்குபற்றிய தான வட மாகாண யூடோ போட்டியில் முல்லைத்தீவு மாவட்டத்தின் ஆண்கள் அணியும், பெண்கள் அணியும் வட மாகாணத்தில் 1 ஆம் இடத்தை பெற்றுக்கொண்டுள்ளனர்.

ஆண்கள் பிரிவில், முல்லைத்தீவு மாவட்டம் 4தங்கம், 1 வெள்ளி, 3வெண்கலம் பெற்று முதலிடமும், கிளிநெச்சி மாவட்டம் 2தங்கம், 1 வெள்ளி, 2 வெண்கலம் பெற்று 2 ஆம் இடமும், வவுனியா மாவட்டம் 1தங்கம், 4வெள்ளி, 4வெண் கலம் பெற்று 3 ஆம் இடமும், மன்னார் மாவட்டம் 1தங்கம், 1 வெண்கலம் பெற்று 4 ஆம் இடத்தினையும் பெற்றுள்ளனர்.

அதே வேளைபெண்கள் பிரிவில் முல்லைத்தீவு மாவட்டம் 5தங்கம் ,4வெள்ளி 3வெண்கலம் பெற்று முதலிடமும், வவுனியா மாவட்டம் 1தங்கம், 1வெள்ளி, 1வெண்கலம் பெற்று 2 ஆம் இடமும், கிளிநொச்சி மாவட்டம் 3 வெண்கலம் பெற்று 3 ஆம் இடத்தினையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-8-299)

# முத்தரப்பு தொடர் இறுதிப்போட்டி
## இலங்கையை வீழ்த்தி இந்தியா அபாரம்

முத்தரப்பு ஒருநாள் தொடரின் இறுதிப்போட்டியில் இலங்கையை 97 ரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி இந்திய அணி அபார வெற்றி பெற்றது.

இந்தியா, இலங்கை மற்றும் தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையேயான முத்தரப்பு ஒருநாள் தொடரின் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்றது. இந்தப் போட்டியில் இந்தியா மற்றும் இலங்கை அணிகள் விளையாடின.

இரு அணிகளுக்கும் இடையிலான இந்த இறுதிப்போட்டியில் டாஸ் வென்ற இந்திய அணி பட்டிங்கைத் தேர்வு செய்து முதலில் விளையாடியது. முதலில் விளையாடிய இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களின் முடிவில் 7 விக்கெட்டுகளை இழந்து 342 ரன்கள் எடுத்தது.

343 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற மிகப் பெரிய இலக்கை நோக்கி விளையாடிய இலங்கை அணி 48.2 ஓவர்களில் 245 ரன்களுக்கு ஆட்டமிழந்தது. இதன் மூலம், 97 ரன்கள் வித்தியாசத்தில் இந்தியா அபார வெற்றி பெற்றது.

இலங்கை அணியில் கப்டன் சமாரி அத்தப்பத்து அரைசதம் கடந்து அசத்தினார். அவர் 66 பந்துகளில் 51 ரன்கள் எடுத்து ஸ்நே ராணா பந்துவீச்சில் போல்டானார். அதில் 6 பவுண்டரிகள் மற்றும் ஒரு சிக்ஸர் அடங்கும். அவரைத் தொடர்ந்து, நிலாக்ஷி டி சில்வா 48 ரன்களும், விஷ்மி குணரத்னே 36 ரன்களும் எடுத்தனர்.

அதிரடியாக விளையாடி சதம் விளாசிய ஸ்மிருதி வந்தனா ஆட்ட நாயகியாகவும் இந்த தொடர் முழுவதும் அபாரப் பந்துவீச்சை வெளிப்படுத்திய ஸ்நே ராணா தொடர் நாயகியாகவும் தேரந்தெடுக்கப்பட்டனர்.(6-8)




# ரியல் மாட்ரிட்டை வீழ்த்தி பார்சிலோனா த்ரில் வெற்றி



2024-25 லா லிகா லீக்கில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற பரபரப்பான ஆட்டத்தில் ரியல் மாட்ரிட்டை 4-3 என்ற கோல் கணக்கில் பார்சிலோனா வீழ்த்தியது.

ரியல் மாட்ரிட் அணியில் கைலியன் எம்பாப்பே ஹாட்ரிக் கோல் அடித்தார். ஆனால் அது அந்த அணி வெற்றி பெற போதுமானதாக இல்லை.

பார்சிலோனா அணிக்காக, ரஃபின்ஹா இரண்டு கோல்களையும், லாமின் ய்மல் மற்றும் எரிக் கார்சியா தலா ஒரு கோலையும் அடித்து அணியின் வெற்றியில் முக்கிய பங்கு வகித்தனர்.

இந்த வெற்றியின் மூலம், லீக்கில் இன்னும் மூன்று போட்டிகள் மட்டுமே மீதமுள்ள நிலையில், பார்சிலோனா அணி, புள்ளிகள் பட்டியலில் நடப்பு சாம்பியனான ரியல் மாட்ரிட்டை விட ஏழு புள்ளிகள் முன்னேறியுள்ளது.

# டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக விராட் கோலி அறிவிப்பு



இந்திய அணியின் நட்சத்திர வீரரான விராட் கோலி டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள் ளார்.

இங்கிலாந்து தொடருக்கு முன்னதாக டெஸ்ட் போட்டியில் இருந்து ஓய்வு பெறுவதற்கான விருப்பத்தை விராட் கோலி இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத் திடம் தெரிவித்திருந்த நிலையில் இந்த ஓய்வு அறிவிப்பு வந்துள்ளது.

இது தொடர்பாக கோலி தனது எக்ஸ் சமூகவலைதளப் பக்கத்தில், “14 ஆண்டுகளுக்கு முன்னர் நான் டெஸ்ட் கிரிக்கெட் ஆடினேன். டெஸ்ட் கிரிக்கெட் பயணம் என்னை இவ்வளவுதூரம் கூட்டிச் செல்லும் என்று நான் நினைத்ததில்லை. அது என்னை பல்வேறு சோதனைகளுக்கு உட்படுத்தி, என்னை செதுக்கி, எனக்கு பல பாடங்களைக் கற்றுக் கொடுத்தது. அந்தப் பாடங்களை நான் வாழ்நாள் முழுவதும் கொண்டு செல்வேன்.

வெள்ளை நிற ஆடையில் விளையாடுவது எப்போதும், ஆழமான உணர்வை தரும். டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவது என்பது எளிதானது அல்ல. ஆனால், இந்தக் கடின மான முடிவை நான் சரியான நேரத்தில் எடுத்துள்ளேன். டெஸ்ட் கிரிக்கெட்டுக்கு நான் என்னால் இயன்றதை எல்லாம் கொடுத் துள்ளேன். பதிலுக்கு அது எனக்கு நான் எதிர்பார்க்காததை எல்லாம் தந்தது.

இன்று நன்றி நிறைந்த இதயத்துடன் விடைபெறுகிறேன். டெஸ்ட் கிரிக்கெட்டுக்கும், எனது சகாக்களுக்கும், என்னை ஆளாக்கியவர்களுக்கும் நன்றி. என்னுடைய டெஸ்ட் கிரிக்கெட் வாழ்க்கையை எப்போதும் புன்னகையுடன் திரும்பிப் பார்ப்பேன்.” என்று பதிவிட்டுள்ளார். (6-8)

# அரசாங்கத்தின் செல்வாக்கு ஆறு மாதங்களில் வீழ்ச்சியடைந்துள்ளது

## என்கிறார் லக்ஷ்மன் கிரியெல்ல

(கொழும்பு)

தற்போதைய அரசு எவ்வளவு தூரம் தமது சேவைபற்றி தெரிவித்துக் கொண்டாலும் ஆறுமாத காலத்தில் அவர்களது செல்வாக்கு வீழ்ச்சியடைந்துள்ளதாக முன்னாள் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.



கண்டியில் இடம் பெற்ற ஊடக சந்திப்பு ஒன்றிலே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் தமக்கு அதிக ஆதரவு கிடைத்திருப்பதாக அவர்கள் எவ்வளவு தூரம் புகழ் பாடினாலும், கடந்த தேர்தல் முடிவுகளின் படி அவர்கள் ஆறு மாத காலத்திற்கு முன்பெற்ற வாக்குகளைவிடவும் குறைந்த வாக்குகளையே பெற்றுள்ளனர்.

அதாவது அரசு கடந்த தேர்தலை விட இம் முறை சுமார் 23 இலட்சம் வாக்குகளால் வீழ்ச்சியடைந்துள்ளது. கடந்த தேர்தலில் வாக்களித்த 23 இலட்சம் மக்கள் இம்முறை அவர்களுக்கு வாக்களிக்க தவறி உள்ளனர்.

ஆனால் ஐக்கிய மக்கள் சக்தி கடந்த தேர்தலை விட இம்முறை கூடுதல் வாக்குகளைப் பெற்றுள்ளது.

இந்த அடிப்படையில் பார்க்கும் போது மாகாண சபைத் தேர்தல் ஒன்று நடத்தப்பட்டால் அதில் தற்போதைய ஆட்சியாளர்கள் தோல்வி அடைவது நிச்சயம் என அவர் தெரிவித்தார். (ஙி-8)

# வெசாக் காலத்தில் விசேட சோதனைகள்

(கொழும்பு)

வெசாக் பண்டிகைக் காலத்தில் நாடு முழுவதும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் சோதனைகளை மேற்கொள்ளவுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகாரசபை அறிவித்துள்ளது.

வெசாக்கின் போது பொதுவாகப் பயன்படுத்தப்படும் அடபிரிகர, மதப் பிரசாதங்கள், தூபக் குச்சிகள், அலங்காரப் பொருட்கள் மற்றும் மின்சார பல்புகள் போன்ற பொருட்களுக்கு சிறப்பு கவனம் செலுத்தப்படும் என நுகர்வோர் விவகார அதிகாரசபை அறிவித்துள்ளது. (ஙி-8)



# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 500 | 500 | 400 | 500 | 500 |
| உருளைக்கிழங்கு | 240 | 220 | 230 | 210 | 250 |
| பச்சைமிளகாய் | 160 | 150 | 200 | 170 | 250 |
| தக்காளி | 1200 | 1200 | 1200 | 900 | 1000 |
| மரவள்ளிக்கிழங்கு | 300 | 280 | 300 | 250 | 200 |
| கோவா | 550 | 500 | 600 | 400 | 600 |
| கரட் | 800 | 950 | 1200 | 900 | 1000 |
| பூசணி | 180 | 200 | 180 | 170 | 200 |
| புடோல் | 300 | 300 | 200 | 200 | 300 |
| வாழைக்காய் | 100 | 100 | 100 | 60 | 150 |
| சின்ன வெங்காயம் | 350 | 100-300 | 300 | 120-300 | 400 |
| பெரிய வெங்காயம் | 160 | 160 | 180 | 120 | 200 |
| பாகற்காய் | 1500 | 1000 | 1000 | 1500 | 1200 |
| வெண்டக்காய் | 300 | 300 | 200 | 250 | 500 |
| கருணைக் கிழங்கு | 350 | 350 | 250 | 200 | 400 |
| பயற்றங்காய் | 600 | 500 | 600 | 350 | 600 |
| லீக்ஸ் | 350 | 300 | 300 | 250 | 400 |
| பீற்றூட் | 600 | 600 | 600 | 500 | 600 |
| கறிமிளகாய் | 800 | 800 | 600 | 450 | 600 |
| முருங்கைக்காய் | 2500 | 3200 | 2000 | 1800 | 1600 |
| போஞ்சி | 800 | 950 | 1000 | 500 | 1000 |
| கத்தரிதம்புள்ள | 600 | 400 | 350 | -- | 500 |
| கீரை - 1 பிடி | 150 | 80-140 | 150 | 70 | 200 |
| தேசிக்காய் | 400 | 300 | 400 | 350 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 200 | 280 | 250 | 120-250 | 200-250 |
| இராசவள்ளி | 650 | 700 | 1000 | 450 | 600 |
| வெங்காயப்பூ | 800 | 600 | 600 | -- | 600 |
| முள்ளங்கி | 100 | 200 | 200 | 150 | 400 |
| பொன்னாங்காணி | 120 | 70 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 70 | 100 | 80 | 80 |
| ஈரப்பலா | 150 | -- | 100 | -- | -- |

# புத்தளத்தில் பெருந்தொகையான பீடி இலைகள் மீட்பு

(கொழும்பு)

புத்தளம், கற்பிட்டி - முகத்துவாரம் கடற்பகுதியில் இருந்து ஒருதொகை பீடி இலைகள் கடந்த சனிக்கிழமை மீட்கப்பட்டுள்ளன.

குறித்த கடற்பிரதேசத்தில் முன்னெடுத்த தேடுதல் நடவடிக்கையின் போது அங்கு சந்தேகத்திற்கு இடமான முறையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இரண்டு டிங்கி இயந்திர படகுகளை படையினர் சோதனையிட்டுள்ளனர்.

இதன்போது, குறித்த டிங்கி இயந்திர படகுகளில் இருந்து 14 உரப்பைகளில் அடைக்கப்பட்ட நிலையில் 497 கிலோ கிராம் பீடி இலைகள் மீட்கப்பட்டுள்ளதுடன், சந்தேக நபர்கள் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர். (ஙி-8)

# இராசிபலன்

13.05.2025
சித்திரை 30, செவ்வாய்க்கிழமை
பிரதமை பின்னிரவு 12.16 மணிவரை

விசாகம் முற்பகல் 9.08 மணிவரை
சுபநேரம் 10.24-11.54 மணிவரை
இராகுகாலம் 2.54-4.24 மணிவரை

சந்திராஷ்டமம்- அச்சுவினி , பரணி

**வளவன்**

**மேஷம்** - ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள், கொடுக்கல் வாங்கல்களில் கவனம் தேவை.

**ரிஷபம்** - வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், தொழில் சிறப்புக்கள் வந்து சேரலாம், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.

**மிதுனம்** - வீட்டை பராமரிப்பதில் ஆர்வம் கூடும், தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும், வம்பு வழக்குகளை சமாளித்து வளம் காண்பீர்கள், உற்சாகமான நாள்.

**கடகம்** - அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், மாற்று மருத்துவத்தால் உடல் நலன் சீராகும், மனதிற்கினிய சம்பங்கள் இடம் பெறலாம்.

**சிம்மம்** - வாகன சுகத்தால் வளம் காணும் நாள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், சிந்தித்து செயற்பட்டு சிறப்புக்களைக் காணும் நாள்.

**கன்னி** - குடும்பத்தில் நிலவிய குழப்பங்கள் அகலும், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காக உள்ளவர்களின் உதவியை நாடுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**துலாம்** - வருமானம் பெருக வழியமைத்துக் கொள்வீர்கள், உங்கள் பொறுமைக்கு இன்று பரிசு கிடைக்கும், புதிய பொறுப்புக்களும் பதவிகளும் வந்து சேரலாம், வாக்கு மேன்மையுண்டு.

**விருச்சிகம்** - விரும்பிய காரியம் விரும்பியபடியே கைகூடும், வழிபாடு குதூகலம் தரும், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும், பணவரவு திருப்தி தரும்.

**தனுசு** - திட்டமிட்ட காரியமொன்றில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள்.

**மகரம்** - மனதிற்கினிய சம்பவங்கள் நடை பெறும் நாள், பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள், பெரிய மனிதர்களின் தொடர்புகள் கூடும்.

**கும்பம்** - நல்லவர்களின் அறிவுரையும், ஆதரவும் கிடைக்கும், நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும்.

**மீனம்** - சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், அன்பால் சாதித்துக் காட்டும் நாள், எதிர்பார்ப்புகள் நிறைவேறும் வாய்ப்புண்டு, பயணங்கள் அனுகூலம் தரும்.

**ஆணவமும், அகம்பாவமும் என்றாவது ஒரு நாள் நமக்கே எதிரியாக நிற்கும்.**



சண்டிலிப்பாய், சீரணி நாகபூசணி அம்பாள் ஆலய வருடாந்த தேர்த்திருவிழா சித்திராப் பௌர்ணமி தினமான நேற்று திங்கட்கிழமை பக்திபூர்வமாக இடம்பெற்றது. பல அடியவர்கள் கலந்து கொண்டதுடன் காவடி, பாற்செம்பு, கற்பூரச்சட்டி மற்றும் அங்கப் பிரதட்சணம் செய்தும் தமது நேர்த்திக்கடன்களில் ஈடுபட்டிருந்தனர்.

# மனித நுகர்விற்கு ஒவ்வாத உணவுப் பொருட்கள் அழிப்பு

(நெளுக்குளம்)

ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட அம்பகாமம் மம்மில் பிள்ளையார் ஆலய வருடாந்த சித்திரை பௌர்ணமி உற்சவத்தை முன்னிட்டு ஆலய வளாகத்தில் அமைக்கப்பட்ட உணவுக் கடைகள், சிற்றூண்டி கடைகள் மீது திடீர் பரிசோதனை ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டிருந்தது.

குறித்த சோதனை நடவடிக்கையில் ஒட்டுசுட்டான் வைத்திய அதிகாரி பிரிவிற்குட்பட்ட மாங்குளம் பொதுச்சுகாதார பரிசோதகர்களான நதிருசன் தலைமையில் பொதுச்சுகாதார பரிசோதகர்களான லோஜிதன், டிலக்சன் ஆகியோர்களினால் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

அதன்போது மனிதநுகர்விற்கு பொருத்தமற்ற உணவுப் பொருட்கள் அழிக்கப்பட்டதோடு மற்றும் உணவு ஸ்தாபன உரிமையாளர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்ததோடு பொதுச்சுகாதார பரிசோதகர்களினால் உணவு ஸ்தாபனங்கள் கடைப்பிடிக்க வேண்டிய சுகாதார வழிமுறைகளும் எடுத்து கூறப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (6-8-299)

## வெசாக் தினத்தை முன்னிட்டு யாழ். சிறைச்சாலையில் 20 கைதிகள் விடுதலை

(யாழ்ப்பாணம்)

வெசாக் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் இருந்து 20 கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர்.

வெசாக் பண்டிகையை முன்னிட்டு ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் நாடு முழுவதும் சிறு குற்றங்களுக்காக குறுகிய கால சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட 388 கைதிகளே நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

அதன்படி யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்து வைத்திருந்த 20 கைதிகள் இவ்வாறு விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கைதிகளை யாழ்ப்பாணம் சிறைச்சாலை அத்தியட்சகர் டி.ஐ.ஜெயவர்த்தன உள்ளிட்ட சிறைச்சாலை அதிகாரிகள் வழியனுப்பிவைத்தனர். (6-8-33)

## அனலைதீவில் மருத்துவ முகாம்



(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலை மற்றும் யாழ். பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர் பணிமனை ஆகியவற்றின் அனுசரணையுடன், அனலைதீவு வைத்தியசாலையில் விசேட மருத்துவ முகாம் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

அதன்போது, நூற்றுக் கணக்கானவர்கள் விசேட வைத்திய நிபுணர்களை சந்தித்து, தங்களுடைய நோய் நிலைகளுக்கான சிகிச்சைகளையும், தொடர்ந்து மேலதிக சிகிச்சை பெறுவதற்கான வழிமுறைகளையும் பெற்றிருந்தனர்.

இந்த மருத்துவ முகாமிற்கு யாழ். பிராந்திய கடற்படை தலைமையகம், கனடா அனலைதீவு ஒன்றியம் மற்றும் பல அமைப்புகள் அனுசரணை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (6-8-33)



மயிலிட்டி திருப்பூர் இளைஞர் நற்பணி ஒன்றிய சனசமூக நிலையத்துடன் இணைந்த கல்வி நிலைய கட்டடத் திறப்பு விழா நேற்று முன்தினம் இடம்பெற்றது.

## திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

கலைவாணி சனசமூக நிலையம் மற்றும் குப்பிழான் உப தபால் அலுவலகம் புதிய கட்டடத் திறப்பு விழா நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு குப்பிழான் தெற்கில் விவசாய சம்மேளனம் அருகிலுள்ள நிலைய முன்றலில் இடம் பெறவுள்ளது.

ஆசிரியர் க. கமலதாஸ் தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், யாழ்ப்பாணம் பிரதி அஞ்சல் மா அதிபர் திருமதி மதுமதி வசந்தகுமார், யாழ்ப்பாணம் பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் S.A.D பெர்ணான்டோ, வலிகாகம் தெற்கு உடுவில் பிரதேச சபையின் செயலாளர் பா.ஜெயகரன், வலிகாமம் தெற்குப் பிரதேச சபையின் செயலாளர் அ.பிரதீபன், சுன்னாகம் தபாலதிகாரி திருமதி கவிதா சிவகுமாரன், வலி தெற்கு பிரதேச சபை சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சர்மிளா மயூரன், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன், குப்பிழான் தெற்கு J/210 கிராம அலுவலர் செல்வி பிரதீபா சுதாகரன் மற்றும் குப்பிழான் வடக்கு J/ 211 கிராம அலுவலர் இ.றமேஸ் ஆகியோர் விருந்தினர்களாக பங்கேற்கவுள்ளதாக கலைவாணி சனசமூக நிலைய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (3-8-33)



அரும்பு நிலையம் மற்றும் யாழ். போதனா வைத்தியசாலை ஆகியன இணைந்து வெளியிட்ட வைத்தியர் சிவசுப்பிரமணியம் சிவதாஸ் எழுதிய "பேறுகால உளநலம்" நூல் வெளியீடு நேற்று யாழ். பொது நூலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

## இளங்கோ அடிகளாரின் நினைவேந்தல் வவுனியாவில்



(குருமன்காடு)

வவுனியாவில் இளங்கோ அடிகளாரின் நினைவு நாள் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

தமிழில் தோன்றிய முதல் காப்பியமான சிலப்பதிகாரத்தை இயற்றிய இளங்கோ அடிகளார் சித்திரை முழு நிலா நாளில் நினைவு கூரப்படுகின்றார்.

அந்தவகையில் வவு னியா சின்னப்புதுக் குளம், சிவன் கோவிலுக்கு அருகிலுள்ள இளங்கோ அடிகளின் திருவுருவச் சிலைக் கருகில் குறித்த நிகழ்வானது இடம் பெற்றது. இதன்போது இளங்கோ அடிகளாரின் திருவுருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்து மலர் அஞ்சலி செலுத்தப்பட்டதுடன், சிறப்புரைகளும் இடம் பெற்றிருந்தது.

வவுனியா மாநகர சபையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில் நகரசபை உத்தியோகத்தர்கள், தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் சந்திரகுமார், சமூக ஆர்வலர்கள் மற்றும் மாணவர கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (6-8-250)

# முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு

## பல்கலைக்கழக மாணவர்களால் முன்னெடுப்பு

(யாழ்ப்பாணம்)

**முள்ளிவாய்க்கால் இனப் படுகொலையை நினைவு கூர்ந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களால் முள்ளிவாய்க் கால் கஞ்சி தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டது.**





முள்ளிவாய்க்கால் இனப் படுகொலையை நினைவுகூர்ந்து நேற்று முதல் எதிர்வரும் மே 18 ஆம் திகதிவரை வடக்கு- கிழக்கு தமிழர் தாயகமெங்கும் பயணித்து முள்ளிவாய்க்கால் கஞ்சியினை வழங்க யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஏற்பாடு செய்துள்ளது.

இதன் முதல் நிகழ்வு நேற்று திங்கட்கிழமை வல் வெட்டித்துறையில் அமைந் துள்ள விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் இல்லத்திற்கு அருகில் உள்ள ஆலடி பகுதி யில் இடம்பெற்றது.

பல்கலைக்கழக மாணவர் களால் அப்பகுதி மக்களிடம் அரிசி சேகரிக்கப்பட்டு முள்ளி வாய்க்கால் கஞ்சி தயாரிக்கப் பட்டு சிரட்டைகளில் பொது மக்களுக்கு வழங்கப்பட் டது.

முள்ளிவாய்க்கால் இனப் படுகொலை வார காலப்ப குதியை துக்கதினமாக தமிழ் மக்கள் அனுஷ்டிக்க வேண்டும். கேளிக்கை ரீதியான நிகழ்வு களையோ நினைவுகூரலை அவமதிக்கும் வகையான செயற்பாடுகளையோ இந்த காலப் பகுதியில் தமிழ் மக்கள் தவித்துக் கொள்ள வேண்டும் என்றும் யாழ்ப்பாணப் பல் கலைக்கழக மாணவர் ஒன்றி யம் இதன்போது கோரிக்கை விடுத்தது. (நி-8-33)

# இயற்கை எரிவாயு விலையில் மாற்றம்

(கொழும்பு)

உலக சந்தையில் இயற்கை எரிவாயுவின் விலை வீழ்ச்சியை பதிவு செய்துள் ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதன்படி, நேற்று இய ற்கை எரிவாயுவின் விலை 3.76 அமெரிக்க டொலராக பதிவாகியுள்ளது.

இதேவேளை, சர்வதேச சந்தையில் மசகு எண்ணெய் யின் விலை சற்று அதி கரிப்பைப் பதிவு செய்துள் ளது.

உலக சந்தையில் WTI ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன் றின் விலை 61.39 அமெரிக்க டொலராக அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது.

அத்துடன் பிரெண்ட் ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன் றின் விலை 64.26 அமெரிக்க டொலராக அதிகரித்துள் ளது. (நி-8)

# வெசாக் அலங்காரத்தில் ஈடுபட்ட சிறுமி மின்சாரம் தாக்கி உயிரிழப்பு

(களுத்துறை)

வெசாக் பண்டிகையை முன்னிட்டு தனது குடும்பத் தினருடன் இணைந்து வீட்டை அலங்கரித்துக் கொண் டிருந்த சிறுமி ஒருவர் மின் சாரம் தாக்கி உயிரிழந்துள் ளதாக பொலிஸார் தெரிவித்த னர். இந்தச் சம்பவம் களுத் துறை, மொரகஹஹேன பிர தேசத்தில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது, சம்பவத்தன்று உயிரிழந்த சிறுமி வெசாக் பண்டிகையை முன்னிட்டு தனது குடும்பத்தினருடன் இணைந்து வீட்டை பல வர்ண மின் கலங்களால் அலங்கரித் துக்கொண்டிருந்துள்ளார்.

பின்னர் இந்த சிறுமி பல வர்ண மின்கலங்களுக்கு மின் சாரத்தை வழங்க முயற்சித்த போது மின்சாரம் தாக்கி காய மடைந்துள்ளார்.

காயமடைந்த சிறுமி பாது க்கை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக ஹோமாகம ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட பின்னர் உயி ரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் மொரக ஹஹேன பொலிஸார் மேல திக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (நி-8)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3321

ராஜா

காதல் என்பது மொட்டை மாதிரி
அடிக்க அடிக்க வளரும்...



கல்யாணம் என்பது சொட்ட மாதிரி
ஒரு தடவ விழுந்துட்டா வளரவே வளராது...

வந்திதா

நோயாளியைப் பார்க்கப் போகும் போது
அமெரிக்கர்கள்-விரைவில் குணமடைய வாழ்த்துக்கள்...
பிரிட்டிஸ்-அதிவிரைவில் குணமடைய வாழ்த்துக்கள்
நம்மாளு-இதே மாதிரி தான் எங்க சொந்தக்காரர் இதே நோயில் இறந்தார்.



தினிதன்

சம்மர் டே
காற்று வாங்கப் போனேன்..
நல்லா கருகிப் போயி வந்தேன்...



வாதுஷ்



அப்பா போட்டிருப்பது

மகனுக்கு வாங்கிக் கொடுத்தது

கனிவிழி




மிதுஷா

ஸ்கூல் லீவு விட்ட போது மகன் , மகள்,பேரன், பேத்தி எல்லோரும்..
தனியா இருக்கிற பாட்டிய பார்க்க வந்திருக் கிறார்களாம்.



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# பாரதம்

## “செஸ்” விளையாட்டிற்கு ஆப்கானில் தடை



(காபூல்)

ஆப்கானிஸ்தானில் செஸ் (சதுரங்கம்) விளையாடுவதற்கும் அது தொடர்பான அனைத்து நடவடிக்கைகளுக்கும் தலிபான் அரசு காலவரையற்ற தடைவிதித்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதுகுறித்து அரசாங்க விளையாட்டுத் துறை செய்தித் தொடர்பாளர் அடல் மஷ்வானி கூறுகையில், இஸ்லாமிய சட்டத்தின் கீழ் சதுரங்கம் சூதாட்டத்தின் ஒரு வடிவமாகக் கருதப்படுகிறது.

இது நாட்டின் "நன்மையை ஊக்குவித்தல் மற்றும் தீமையைத் தடுப்பதற்கான சட்டத்தின்" படி தடை செய்யப்பட்டுள்ளது. சதுரங்கத்திற்கு மத ரீதியான ஆட்சேபனைகள் உள்ளன.

இந்த ஆட்சேபனைகள் தீர்க்கப்படும் வரை, ஆப்கானிஸ்தானில் இந்த விளையாட்டு நிறுத்தி வைக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

எனினும், இந்த முடிவு சதுரங்க ஆர்வலர்கள் மற்றும் தொடர்புடைய வணிகங்கள் மத்தியில் ஏமாற்றத்தைத் தந்துள்ளது.

முன்னதாக பெண்கள் விளையாட்டுகளில் பங்கேற்கத் தலிபான் அரசு தடை விதித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

## போரில் வென்றதாகக்கூறி தம்பட்டம் அடிக்கும் பாகிஸ்தான்



(இஸ்லாமாபாத்)

இந்தியா - பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளுக்கு இடையே தற்காலிக போர் நிறுத்தம் மட்டுமே அறிவிக்கப்பட்ட நிலையில், போரில் வெற்றி பெற்றதாக கூறி, “இராணுவத்துக்கு நன்றி தெரிவிக்கும் தினம” என்ற பெயரில், பாகிஸ்தான் தம்பட்டம் அடித்து நேற்று முன்தினம் கொண்டாட்டத்தில் ஈடுபட்டது.

ஜம்மு - காஷ்மீரின் பஹல்காமில், 26 பேரை பாகிஸ்தான், பயங்கரவாதிகள் சுட்டுக் கொன்றனர். இதற்கு பழிவாங்கும் விதமாக, “ஆப்ரேஷன் சிந்தூர்” என்ற இராணுவ நடவடிக்கையை துவங்கிய இந்தியா, பாகிஸ்தானில் பயங்கரவாத முகாம்களை தகர்த்தது. அத்துடன் இந்தத் தாக்குதலில் 100இற்கும் மேற்பட்ட பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர்.

இதையடுத்து, இந்தியாவுடன் பாகிஸ்தான், இராணுவம் மோதலில் ஈடுபட்டதால், இருதரப்பிலும் ஏவுகணை, ட்ரோன் தாக்குதல் தொடர்ந்தது. மூன்று நாட்கள் நீடித்த இந்த தாக்குதலில், பாகிஸ்தானில் இருந்து நீண்ட தொலைவு ஏவுகணைகள் ஏவப்பட்ட ஆறு முக்கிய விமானப்படை தளங்கள் மற்றும் இரண்டு ரேடார் மையங்கள் தகர்க்கப்பட்டன.

இதையடுத்து, பிற்பகலிலேயே போரை நிறுத்த பாகிஸ்தான், இறங்கி வந்தது. இதையடுத்து, தற்காலிக போர் நிறுத்தத்துக்கு இந்தியாவும் ஒப்புக்கொண்டது. ஆனால், இந்தப் போரில் வெற்றி பெற்று விட்டதாக பாகிஸ்தான், கூறி வருகிறது.

அந்நாட்டு அரசு வானொலி வாயிலாக பிரதமர் ஷபாஸ் ஷெரீப்பின் செய்தி வாசிக்கப்பட்டது. அதில், “இந்தியாவின் ஆக்கிரமிப்புக்கும் ஆப்ரேஷன்” என்ற பெயரிலான தாக்குதலுக்கும் இரும்புச் சுவர் வாயிலாக தகுந்த பதிலடி கொடுத்த எமது இராணுவத்துக்கு நன்றி தெரிவிக்கும் விதமாக நன்றி தினத்தை, நாடு முழுவதும் கொண்டாட பிரதமர் ஷெரிப் அழைப்பு விடுத்தார்.

கடவுளுக்கும் பாகிஸ்தான் இராணுவத்தின் இணையில்லா துணிச்சலுக்கும் நன்றி செலுத்துவதோடு, போரில் உயிரிழந்தவர்களுக்காக சிறப்பு பிரார்த்தனை நடத்தும்படி, மதகுருமார்களையும் கேட்டுக் கொண்டார்.

இதன்படி, போரில் வெற்றி பெற்றதாக கூறி, பாகிஸ்தானில் நேற்று முன்தினம் கொண்டாட்டங்கள் நடந்தன. பாகிஸ்தானில் பஞ்சாப், சிந்து உள்ளிட்ட கிழக்கு பகுதியில் உள்ள மாகாணங்களில் பாகிஸ்தானின், கொடிகளை ஏந்தியபடி பலர் வீதிகளில் சென்றனர். சிந்து மாகாணத்தில் உள்ள ஹைதராபாத்தில் பட்டாசுகளை வெடித்து கொண்டாடினர். போர் நிறுத்த அறிவிப்பையே, வெற்றி பெற்றதாக கொண்டாடி வரும் பாகிஸ்தானின் செயல், உலக நாடுகளால் வித்தியாசமாக பார்க்கப்படுகிறது. (நி-8)

## யுத்த நிறுத்த மீறல்
### இந்தியா பாகிஸ்தான் பரஸ்பரம் சாடல்



(டில்லி)

இந்தியாவும் பாகிஸ்தானும் பரஸ்பரம் யுத்தநிறுத்தத்தை மீறியுள்ளதாக இரு தரப்பும் குற்றம்சாட்டியுள்ளன.

காஷ்மீரில் வெடிப்புச்சத்தங்கள் கேட்டுள்ள நிலையில் பாகிஸ்தான் யுத்த நிறுத்த இணக்கப்பாட்டினைமீறியுள்ளது என இந்தியாவின் வெளிவிவகார செயலாளர் விக்ரம் மிஸ்ரி தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்தியா சில பகுதிகளில் யுத்த நிறுத்தத்தை மீறுகின்றது என பாகிஸ்தானும் குற்றம் சாட்டியுள்ளது. (நி-8)

## தனக்குத் தானே சிலை வைத்தார் ட்ரம்ப்

(வோஷிங்டன்)

கடந்த ஆண்டு தேர்தல் பிரசாரத்தின் போது பேசி கொண்டிருந்த ட்ரம்ப் மீது துப்பாக்கிசசூடு நடத்தப்பட்டது

அந்த சம்பவத்தை நினைவு கூறும் விதமாக ட்ரம்ப் சிலை வைத்துள்ளார். அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் ஓவல் மாளிகையில் தனக்கு தானே சிலை வைத்துள்ளது பேசு பொருளாகியுள்ளது.

கடந்த ஆண்டு தேர்தல் பிரசாரத்தின் போது பேசி கொண்டிருந்த ட்ரம்ப் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது. இந்த தாக்குதலில் நூலிழையில் உயிர்தப்பிய ட்ரம்ப், அந்தச் சம்பவத்தை நினைவு கூரும் விதமாக சிலை வைத்துள்ளார். இந்தப் புகைப்படத்தை வெள்ளை மாளிகை தனது எக்ஸ் பக்கத்தில் பகிர்ந்துள்ளது. (நி-8)



## புடின்
## சர்வதே



குறித்த சந்திப்பு நாளை மறுதினம்
வியாழக்கிழமை துருக்கியின்
இஸ்தான்புல்லில் இடம்பெறவுள்ளது.

## ஆபிரிக்காவி
## 62 பேர் உ
### பலர் ம

(கின்ஷாசா)

ஆபிரிக்க நாடான காங்கோ ஜனநாயக குடியரசில் கனமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் சிக்கி சுமார் 62 பேர் உயிரிழந்துள்ளதுடன் பலர் காணாமல் போயுள்ளனர். அவர்களை தேடும் பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது.

மத்திய ஆபிரிக்க நாடான, காங்கோ ஜனநாயக குடியரசில் கனமழை கொட்டித் தீர்த்து வருகிறது. கிழக்கு மாகாணமான கிவுவில் மழை வெளுத்து வாங்குகிறது. இதன் காரணமாக, நங்கன்ஜா நகரில் உள்ள டாங்கன்யிகா உட்பட பல ஏரிகள் நிரம்பியது. இதனால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் சிக்கி பலர் அடித்து செல்லப்பட்டனர்.

இதுவரை வெள்ளப்பெருக்கில் சிக்கி

# வரவிற்காக காத்திருப்பேன்!

## தேசமே எதிர்பார்க்கும் முக்கிய சந்திப்பு



(கீவ்)

**போர் நிறுத்தம் தொடர்பான பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதற்காக ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினை உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலன்ஸ்கி சந்திக்கவுள்ளார்.**

துருக்கியில் இரண்டு நாடுகளுக்கும் இடையே நேரடிப் பேச்சுவார்த்தை நடத்த புடின் முன்மொழிந்திருந்தார்.

குறித்த முன்மொழிவுக்கு உக்ரைன் உடன்பட வேண்டும் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கோரிய சிறிது நேரத்திலேயே ஜெலன்ஸ்கி தனது "X" தளத்தில் பதிவொன்றை இட்டு அதனை உறுதிப்படுத்தியுள்ளார்.

மக்கள் கொல்லப்படுவது தொடர்வதில் எந்த ஒரு பலனும் இல்லை எனவும் வியாழக்கிழமை துருக்கியில் புடினுக்காக நான் காத்திருப்பேன் எனவும் ஜெலன்ஸ்கி குறித்த பதிவில் தெரிவித்துள்ளார்.



மேலும், இந்த முறை ரஷ்யா, எந்தவொரு சாக்கையும் கூறாது போர் நிறுத்தத்திற்கு உடன்படும் என தான் நம்புவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-8)

## ...வில் கனமழை ...உயிரிழப்பு ...மாயம்



62 பேர் உயிரிழந்தனர்.

மேலும் 50 இற்கும் மேற்பட்டோர் மாயமாகியுள்ளனர்.

அவர்களைத் தேடும் பணி நடந்து வருகிறது. வெள்ளப் பெருக்கு காரணமாக, மின்சாரம் மற்றும் தொலைபேசி இணைப்புகள் துண்டிக்கப் பட்டுள்ளன. (நி-8)



## இந்தியா, பாகிஸ்தான் போர் நிறுத்தம் வரவேற்றார் பாப்பரசர் லியோ

(வத்திக்கான்)

இந்தியா, பாகிஸ்தான் இடையே போர் நிறுத்தம் ஏற்பட்டதை பாப்பரசர் லியோ வரவேற்றுள்ளார். புதிய பாப்பரசராக பொறுப்பேற்றுக் கொண்ட பின்னர் பொதுமக்கள் முன்னிலையில் உரையாற்றினார்.

குறித்த உரையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். மேலும் உலகம் முழுவதும் உள்ள அன்னையர்களுக்கு அன்னையர் தின வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொண்டார்.

உக்ரைன் மற்றும் காசாவில் அமைதி ஏற்பட வேண்டும் என வேண்டுகோளாக கேட்டுக் கொண்டார். உடனடி போர் நிறுத்தம் ஏற்பட வேண்டும், பணயக் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும் மற்றும் மனிதாபிமான உதவிகள் வழங்கப்பட வேண்டும் என்றும் அப்போது அவர் வலியுறுத்தினார். பாப்பரசர் பிரான்சிஸ் கூறிய விடயங்களை எதிரொலிக்கும் வகையில் இந்தியா மற்றும் பாகிஸ்தான் இடையே போர் நிறுத்தம் ஏற்பட்டதற்கு பாப்பரசர் லியோ வரவேற்பு தெரிவித்துள்ளார்.

உலகில், அமைதிக்கான அற்புதம் ஏற்படுவதற்கு கடவுள் ஆசி வழங்கும்படி வேண்டிக்கொள்கின்ற அதேவேளை பேச்சுவார்த்தைகள் நீடித்த அமைதிக்கு வழி வகுக்கும் என அவர் நம்பிக்கையையும் வெளியிட்டார். (நி-8)



# இலவச கண் பரிசோதனையும் மூக்குக்கண்ணாடி வழங்கலும்



(மன்னார்)

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள துள்ளு குடியிருப்பு பகுதியில் இலவசமாக கண் பரிசோதனை செய்யப்பட்டு அந்த நபர்களுக்கு இலவச மூக்குக் கண்ணாடிகள் வழங்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

"ஈகில் ஐ இன்டர்நேஷனல் நெட் வர்க் பிரைவேட் லிமிடெட்" நிறுவனத்தின் அனுசரனையுடன் மன்னார் துள்ளு குடியிருப்பு கிராம பகுதியில் 39 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு இலவசமாக கண் பரிசோதனை செய்யப்பட்டு அவர்களுக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடிகளும் வழங்கப்பட்டன.

கொழும்பிலிருந்து வருகை தந்த வைத்தியர்கள் இப்பரிசோதனையை முன்னெடுத்தனர்.

இதன்போது துள்ளு குடியிருப்பு, கட்டுக்காரன் குடியிருப்பு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த நூற்றுக் கணக்கானவர்கள் கலந்து கொண்டு பயனடைந்துள்ளனர். (6-8-283)


## கல்யாணமாலை

### சர்வதேச இலவச திருமண சேவை

#### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1989-இந்து
நட்சத்திரம்: திருவோணம்
கி.பா-45
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: பட்டதாரி,Finance Manager
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15440

பிறப்பு: 1991-இந்து
நட்சத்திரம்: உத்தரம்
கி.பா- 17 1/2
உயரம்: 5'6"
தகைமை/தொழில்-CIMA, Designer (Canada)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15441

பிறப்பு: 1976-இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா-44
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:A/L,Driver(OWN)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15444

பிறப்பு: 1990-இந்து
நட்சத்திரம்: அனுசம்
கி.பா-39 3/4
1இல் 'செவ்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: BSc,Business (London)
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/15446

பிறப்பு: 1981-இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
கி-பா-16 1/2
5இல்சூரி செவ்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: BSc, MSc.PHD
எதிர்பார்ப்பு: த்குதியான பெண்
தொ.இ: B/15447

#### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு-1998-இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா-47
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: Bsc,ITField
எதிர்பார்ப்பு: Degree(வெளிநாடு)
தொ.இ: G/15467

பிறப்பு: 1998-இந்து
நட்சத்திரம்: ரேவதி
12இல் செவ்
உயரம்; 5'3"
கி.பா-18
தகைமை/தொழில்: BSc, Chemist (Norway)
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ: G/15478

பிறப்பு: 1991-இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா-8 1/4
உயரம்: 5'8"
தகைமை/ தொழில்: BBA, Executive Officer
எதிர்பார்ப்பு: உத்தியோகம்
தொ.இ: G/15480

பிறப்பு: 1995-இந்து
நட்சத்திரம்: பூராடம்
கி.பா-10
உயரம்: 5'4"
தகைமை/தொழில் - BA, MBA
எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம், Business
தொ.இ: G/15482

பிறப்பு: 1994-இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா-47
உயரம்: 5'3"
தகைமை/தொழில் - BA, Pvt Work
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்,
தொ.இ: G/15488

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


## இன்று ஒரு தகவல் 371

தென்கச்சி கோ.சுவாமிநாதன்



# மனநிறைவு

ஒரு ராஜா இருந்தார். நாடு முழுவதும் நிறைய மரங்களை நட்டு வளர்க்க வேண்டும் என்பது அவருடைய ஆசை. தானே அதற்கு முன்மாதிரியாக இருக்க வேண்டும் என்று நினைத்துஅரண்மனையைச் சுற்றி நிறைய மரங்களை நட்டு வளர்த்தார். இதைப்பார்த்துவிட்டு மக்களும் அவர்கள் வீட்டைச் சுற்றிமரக்கன்றுகளை நட்டுவளர்த்தார்கள். சிறிது காலத்தில் ஊர் முழுவதும் பசுமையாக மாறிவிட்டது. எல்லோருக்கும் மகிழ்ச்சியாக இருந்தது. இது ஒரு பக்கம் இருக்கட்டும். இப்பொழுது நான் சொல்லப்போகும் கதை வேறு. அதாவது. அந்த ராஜா ஒரு நாள் தன்னுடைய அரண்மனையைச் சுற்றியிருக்கின்ற விதவிதமான மரங்களை எல்லாம் போய்ப் பார்த்தார். "எப்படியிருக்கிறீர்கள் என்று ஒவ்வொரு மரத்திடமும் விசாரித்தார். எந்த மரமும் சந்தோஷமாக இருப்பதாகத் தெரியவில்லை. அது அதுக்கும் மனதில் குறை!

முதலில் ஆலமரத்திடம் போனார். அது சொல்லியது. "மன்னா. நான் நல்லா பெரிசாக வளர்ந்திருக்கேன். அடர்த்தியாக இருக்கின்றேன் கிளையெல்லாம் நாலுபக்கமும் நன்றாக படர்ந்துதான் இருக்கிறது. இருந்தாலும் என்ன பிரயோஜனம்.

என்னுடைய பழம் மிகவும் சின்னதாக இருக்கின்றது. என் கண்ணுக்கே சரியாக புலப்படவில்லை. நான் இருக்கிற அளவுக்கு என் கிளையிலே இருக்கிற பழம் எவ்வளவு பெரிதாக இருக்க வேண்டும். அது சிறியதாக இருக்கிறது எனக்கு பெரிய அவமானமாக இருக்கிறது. இப்படி இங்கே நின்று கொண்டிருப்பது மிகவும் கூச்சமாக இருக்கிறது. ஒரு நல்ல புயல் வந்தால் பேசாமல் சாய்ந்து விடலாம் என பார்க்கிறேன்!" என்று புலம்பியது ஆலமரம். சரி இருக்கட்டும் என்று நினைத்துக் கொண்டு அடுத்தப்படியாக ஒரு அத்திமரத்திடம் போனார் ராஜா. அதுவும் புலம்ப ஆரம்பித்தது. "நான் கூட பெரிய மரந்தான். இலை அழகாயிருக்கிறது . பழம் அழகாயிருக்கிறது. இருந்தாலும் உள்ளே விடயம் இல்லையே"அத்திப்பழத்தைப் பிய்த்துப் பார்த்தால். அத்தனையும் சொத்தை! என்று பழமொழியே உண்டாயிட்டுதே. இப்படி ஒரு கெட்ட பெயருடன் நான் இருக்க வேண்டுமா ? அப்படி என்றது. சரி இது இருக்கட்டும் என்று அடுத்தப்படியாக வேப்ப மரத்திடம் சென்றார் . அது தன்னுடைய வேதனையை வெளியிட்டது.

"எனக்கு எவ்வளவோ மருத்துவ குணங்கள் எல்லாம் இருக்கிறதாக சொல்லிக் கொள்கிறார்கள். இருந்தாலும் என்ன பிரயோஜனம். என்னுடைய பழத்தை மனிதர்கள் விரும்பி சாப்பிடுவதில்லேயே! அப்படி என்றது. ராஜா அடுத்ததாக இருந்த ஒரு பனை மரத்திடம் போனார். "நான் நல்ல உயரமாகத்தான் வளர்ந்திருக்கிறேன். ஏனைய மரங்கள் எல்லாம் என்னை அண்ணாந்து தான் பார்க்க வேண்டும். இருந்தாலும் என்னிடம் நிழலுக்காக யாரும் வந்து ஒதுங்குவதில்லையே என்றது. என்ன இது எல்லா மரமும் இப்படி திருப்தி இல்லாமல் இருந்து கொண்டிருக்கிறதே என்று நினைத்துக் கொண்டே ராஜா அடுத்தப்படியாக அங்கேயிருந்த ஒரு "பைன்" மரத்திடம் போனார். அழகாக உயரமாக பசுமையாத்தான் இருந்தது. ஆனால் பழமோ பூவோ கிடையாது. அதை நினைத்து அது வருத்தப்பட்டுக் கொண்டிருந்தது.

"ஓக் "மரம் ஒன்று நின்று கொண்டிருந்தது. அது என்ன சொன்னது என்றால் . "இலையுதிர்காலத்திலே என் மேலே இருக்கின்ற எல்லா இலைகளும் உதிர்ந்து போகிறது. முடி கொட்டியமனிதர்கள் மாதிரி மொட்டையாக நான் நிற்க வேண்டியிருக்கிறது. என்ன வாழ்க்கை இது?" அப்படி என்று சொல்லி அலுத்துக் கொண்டது.

புளியமரம் என்ன சொல்கிறது பார்ப்போம் என்றுஅதனிடம் போனார். "என்னுடைய நிழலிலே யாரும் தங்க மாட்டார்கள். உடம்புக்கு சூடு என்று ஒதுங்கிப் போய் விடுவார்கள். அடி மரத்தைப் பார்த்தீர்கள் என்றால் பட்டையெல்லாம் உரிந்து பார்ப்பதற்கே கேவலமாக இருக்கிறது" என்றது அது. முருங்கைமரம் என்ன சொல்லியது தெரியுமா? "என்னுடைய இலை - காய் எல்லாம் உட்கொள்பவர்களுக்கு சத்தைக் கொடுக்கிறது வாஸ்தவம். ஆனால் என் உடம்பிலே சத்து கிடையாது. கொஞ்சம் வேகமாக காற்று அடித்தால் முறிந்து விழுந்துவிடுகினறேன். என்ன வாழ்க்கை இது?" அப்படி சொல்லி வருத்தப்பட்டது. ராஜா யோசித்தார். என்ன இது. மரங்கள் பூமியின் வரங்கள் என்று சொல்கிறோம். மழை பெய்வதற்கே அதுதான் காரணம். பூமி செழிப்பாக இருப்பதற்கும் அதுதான் காரணம். வீடுகட்ட மரம், நாற்காலி செய்ய உபயோகிப்பது. மனிதர்களுக்கு வேண்டிய ஆகாரங்களையும் கொடுக்கிறது அப்படியெல்லாம் இருந்தும் எல்லா மரமும் நிம்மதி இல்லாமல் இருக்கிறதே என்று நினைத்தார். அப்போது அங்கே இருந்த ஒரு மகிழ மரம் அவர் கண்ணிலே பட்டுது. அந்த மரம் மட்டும் நிம்மதியாக மகிழ்ச்சியாக இருப்பது போல தெரிந்தது. உடனே ராஜா அதனிடம் சென்றார். "உனக்கு மனதிலே ஏதும் குறை இல்லையா?"என்று கேட்டார். "இல்லை. நான் சந்தோஷமாத்தான் இருக்கிறேன்!" என்றது மகிழ மரம்.

"அப்படியா?"என்று ஆச்சரியமாக கேட்டார்ராஜா. "ஆமாம் மன்னா இந்த இடத்திலே நீங்கள் ஒரு முருங்கை மரத்தையோ வேப்ப மரத்தையோ கூட நட்டிருக்கலாம். ஆனால் இந்த இடத்துலே நடுவதற்கு என்னைத் தேர்ந்தெடுத்தீர்களே! அதுவே எனக்குப் பெருமை அதுவே எனக்கு திருப்தி!" அப்படி என்றது மகிழமரம். மகிழ மரம் சாதாரணமாகத்தான் இருக்கும். இளம் மஞ்சள் நிறத்திலே பூக்கள். அது காயத்தும் மணம் வீசும். மகிழ மரம் மாதிரி மனத்திருப்தியோட வாழ நாம் கற்றுக் கொள்ள வேண்டும். நாம் இந்த உலகத்துலே ஒரு நாயாகவோ நரியாகவோ கூட பிறந்திருக்கலாம். மனிதர்களாக பிறந்திருக்கின்றோம். அதுவே பெருமையல்லவா? இந்த "நிறைவு" தான் மகிழ்ச்சியின் இரகசியம். ஒரு பையன் அப்பாவிடம் சென்று "அப்பா நீங்கள் இந்த உலகத்துலே ஒரு மனிதனாக பிறந்தது என்னுடைய அதிர்ஷ்டம்!"என்றான். "ஏண்டா அப்படி சொல்கின்றாய்!" என்றார் அப்பா. "நீங்கள் ஒரு கரடியாகப் பிறந்திருந்தால் இந்நேரம் நானும் ஒரு கரடிக்குட்டியாகத்தானே இருந்திருப்பேன்!" என்றான் அவன்.

# முள்ளிவாய்க்கால்

## நினைவு முற்றத்தில் சிரமதானம்



(முல்லைத்தீவு)

முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் நேற்று முன்தினம் சிரமதானப் பணி முன்னெடுக்கப்பட்டது.

முள்ளிவாய்க்கால் நினைவு வாரம் ஆரம்பமாகியுள்ள நிலையில் முள்ளிவாய்க்கால் மக்களோடு இணைந்து யாழ். பல்கலைக்கழக மாணவர்களால் முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் சிரமதான பணி முன்னெடுக்கப்பட்டது.

முள்ளிவாய்காலில் மிக மோசமாக மனிதப் படுகொலை இடம்பெற்ற காலப் பகுதியில் மே மாதம் 11 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் இனப்படுகொலை வாரமாக தமிழர்கள் கடைபிடித்து வருகின்றனர். இதன் போது தமிழர் தாயகத்தில் பரவலாக முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்படும்.

மேலும் யாழ். பல்கலைக் கழகம் , ஆலயங்கள், கோவில்கள், சிவில் சமூக அமைப்புகள் ஆகியவற்றின் ஏற்பாட்டால் அஞ்சலி நிகழ்வுகளும் முன்னெடுக்கப்படுகின்றமை குறிப்பிடதக்கது. (6-8-33)

# நினைவேந்தலை முன்னிட்டு முள்ளிவாய்க்கால் கஞ்சி





(யாழ்ப்பாணம்)

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் ஆரம்பமானதை முன்னிட்டு முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கலும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் ஏற்பாட்டில் நேற்று காலை 8 மணிக்கு தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலயத்தில் ஆத்ம சாந்தி வழிபாடு இடம்பெற்றன. தொடர்ந்து முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சி வழங்கி வைக்கப்பட்டது.

அதேவேளை சட்ட விரோத தையிட்டி விகாரைக்கு எதிராக பௌர்ணமி தினமான நேற்று போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது போராட்டத்தில் ஈடுபட்டவர்களால் முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சி வழங்கி வைக்கப்பட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது. (6-8-60)

# தாயக மண்ணிலும் நினைவுத் தூபி நிறுவப்படும்

## முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் குழுவின் வடகிழக்கு பொதுக்கட்டமைப்பின் இணைத்தலைவர்

(வவுனியா)

**இறுதி யுத்தத்திலே கொல்லப்பட்ட மக்களை நினைவு கூரும் வகையில் முள்ளிவாய்க்கால் மண்ணில் நினைவுத் தூபியை அமைக்க திட்டமிட்டுள்ளோம் என முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் குழுவின் வடகிழக்கு பொதுக்கட்டமைப்பின் இணைத்தலைவர் அருட்பணி சின்னத்துரை லியோ ஆம்ஸ்ரோங் தெரிவித்தார்.**

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் முற்றத்தில் நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் கருத்து தெரிவிக்கையில்,

இன்றையநாளிலே கனடாவில் பிரம்டன் நகரில் பிரம்டன் மேயருடைய ஒத்துழைப்பில் பிரமாண்டமான நினைவுத்தூபி ஒன்று கட்டப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு அதற்கான அடிக்கல் நாட்டல் நிகழ்விலே நானும் பிரசன்னமாகி கலந்து கொள்ளக்கூடிய வாய்ப்பு கிடைத்திருந்தது. இன்றைய நாளில் அதனை நிறைவேற்றி இருக்கிறார்கள் அந்த இடத்திலேயே அவர்களுக்கு இருக்கிற சுதந்திரம் நிறைவேற்றக்கூடியதாக அமைந்திருக்கின்றது.

எமது மண்ணிலும் அவ்வாறான ஒரு நினைவுத் தூபியை நாங்கள் அமைக்க வேண்டும்.

இந்த இடத்திலே அதற்குரிய பல்வேறு விடயங்களை நாங்கள் உருவாக்க வேண்டும். அதற்கு இந்த காணியை உரியவர்களிடமிருந்து பெற்று மிக விரைவிலே தொடர்கின்ற ஆண்டுகளிற் குள்ளே இந்த இடத்திலே இங்கே கொல்லப்பட்ட மக்களுக்கு நாங்கள் நினைவு கூருகின்ற வகையில் அவர்களுடைய பெயர்களையும் தாங்கி வரக்கூடிய வகையில் சில நினைவு விடயங்களை முன்னெடுக்க திட்டமிட்டு இருக்கிறோம்.

அதற்கான காலம் எமக்கு நெருங்கி வருகின்றது. அதனை தொடர்கின்ற நாட்களிலேயே நாங்கள் மேற்கொள்ள இருக்கின்றோம்.

நாங்கள் ஆரம்பிக் கின்ற போது அத்தனை சிவில் சமூகங்களோடும், மக்களோடும் அரசியல் சமூகங்களோடும், புலம் பெயர்ந்து வாழ்கின்ற மக் களுடைய ஒத்துழைப் போடும் இங்கு வாழ்கின்ற மக்களுடைய ஒத்துழைப் போடும் நினைவு முற்றத்தை நிச்சயமாக நிறுவுவதற்கான முயற்சிகளை மேற்கொள்வோம் என்பதை இந்த இடத்திலே கூறிக் கொள்ள விரும்புகிறேன் என தெரிவித்தார். (6-8-299)

# வவு.சிறையில் 7 கைதிகள் விடுதலை

(குருமன்காடு)

வெசாக் தினத்தை முன்னிட்டு பொது மன்னிப்பின் அடிப்படையில் கைதிகள் விடுதலை இடம்பெற்ற நிலையில் வவுனியா சிறைச்சாலையில் இருந்தும் 7 கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர்.

நாடளாவிய ரீதியில் 388 கைதிகள் ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் வெசாக் தினத்தை முன்னிட்டு நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

இதன் அடிப்படையில் வவுனியா சிறைச்சாலையிலும் சிறு குற்றங்களோடு சம்பந்தப்பட்டவர்கள் 7 பேர் விடுதலை செய்யப்பட்டனர்.

வவுனியா சிறைச்சாலை அத்தியட்சகர் பி. டபிள்யூ.எச். மதுசங்க தலைமையில் கைதிகள் விடுவிப்பு இடம் பெற்றிருந்தது. (6.8.250)

# கரைதுறைப்பற்று பிரதேச விளையாட்டு விழா நிகழ்வு



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டம் கரைதுறைப்பற்று பிரதேச விளையாட்டு விழா கடந்த வெள்ளிக்கிழமை குறித்த பிரதேசசபை விளையாட்டு மைதானத்தில் கரைதுறைப் பற்று பிரதேச செயலாளர் தலைமையில் இடம் பெற்றது.

இதன்போது கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள அனைத்து கழகங்களுக் கிடையில் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்ற வீர வீராங்கனைகளுக்கு பரிசில் வழங்கி கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமாமகேஸ்வரன் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.குணபாலன், மற்றும் பதவிநிலை உத்தியோகத்தர்கள், ஏனைய உத்தியோகத்தர்கள், பார்வையாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (6-8)

கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 770





வந்தியத்தேவனை நேருக்கு நேர், முகத்துக்கு முகம், நன்றாகப் பார்க்கக் கூடவில்லை. ஆயினும் மற்றவர்களுக்குப் பின்னால் அரைகுறையாகப் பார்த்த அவனுடைய களை பொருந்திய, புன்னகை ததும்பிய முகம் அவள் உள்ளத்தில் பதிந்துவிட்டது. அவனுடைய குரலும் அவன் பேசிய சில வார்த்தைகளும் அவளுடைய ஞாபகத்தில் நிலைத்துவிட்டன.

ஆகையால் மறுபடியும் தமையன் கந்தமாறனுடன் மணிமேகலை முடிவில்லா விவாதம் தொடங்கினாள். முக்கண் படைத்த சிவபெருமானே வந்து சொன்னாலும் தான் மதுராந்தகனை ஒரு காலும் மணக்க முடியாது என்றாள். வந்தியத்தேவனைச் சிறிது நேரமே பார்த்திருந்த போதிலும் அவனிடம் தன் அந்தரங்கம் சென்று விட்டதையும் அவள் குறிப்பாக உணர்த்தினாள். கந்தமாறனுக்கு இது அளவில்லாத கோபத்தை உண்டாக்கிற்று. முதலில் நல்ல வார்த்தையாகச் சொல்லிப் பார்த்தான் பயன்படவில்லை. பின்னர், "வந்தியத்தேவன் என் சிநேகிதன் அல்ல. என் பரம விரோதி. என்னைப் பின்னாலிருந்து முதுகில் குத்திக் கொல்லப் பார்த்தவன். அவனை நீ மணந்து கொள்வதாயிருந்தால் உன்னையும் அவனையும் சேர்த்துக் கொன்று விடுவேன்!" என்றான். முதுகில் ஏற்பட்டிருந்த கத்திக் காயத்தைக் காட்டினான். பழுவூர் இளையராணியின் பரிவான சிகிச்சையினால் உயிர் பிழைத்து எழுந்ததையும் கூறினான்.

"என் பேரில் உனக்கு எள்ளத்தனை விசுவாசமாவது இருந்தால், வந்தியத்தேவனை மறந்து விடு!"

இதைக் கேட்ட பிறகு மணிமேகலையின் மனம் உண்மையில் மாறிவிட்டது. கந்தமாறனிடம் அவள் மிக்க பிரியம் வைத்திருந்தாள். அவனைக் கொல்ல முயற்சி செய்த பகைவனைத் தான் மணந்து கொள்வது இயலாத காரியந்தான். ஆகையால் வந்தியத்தேவனை மறக்க முயன்றாள். ஆயினும் இலேசில் முடிகிற காரியமாயில்லை. அடிக்கடி, எதிர்பாராத சமயங்களில், அவனுடைய புன்னகை ததும்பிய முகம் அவள் மனக் கண்ணின் முன்பு வந்து கொண்டிருந்தது. பகற் கனவுகளிலும் வந்தது. இராத்திரியில் கண்ட கனவுகளிலும் வந்தது.

இதனாலெல்லாம் சில மாத காலமாக மணிமேகலை அவளுடைய இயற்கையான குதூகலத்தை இழந்திருந்தாள். சோகமும் சோர்வும் அவளைப் பீடித்தன. திருமணப் பருவம் வந்துவிட்டது தான் இதற்குக் காரணம் என்று முதியோர் நினைத்தார்கள். பிராய மொத்த தோழிகள் அவளை அது குறித்துப் பரிகாசம் செய்தார்கள். வேடிக்கை விளையாட்டுகள் மூலம் அவளை உற்சாகப்படுத்த தோழிமார்கள் முயன்றார்கள். அது ஒன்றும் பலிக்கவில்லை.

மறுபடியும் சென்ற சில நாளாக மணிமேகலை சிறிது உற்சாகம் கொள்ளத் தொடங்கியிருந்தாள். மதுராந்தகனுக்கு அவளை மணம் செய்து கொடுக்கும் எண்ணத்தை அவள் பெற்றோர்களும் தமையன் கந்தமாறனும் கைவிட்டதை அறிந்ததில் சிறிது உற்சாகம் உண்டாயிற்று. சக்கரவர்த்தியின் மூத்த புதல்வரும் பட்டத்து இளவரசருமான ஆதித்த கரிகாலருக்கு மணிமேகலையைக் கொடுப்பது பற்றி அவர்கள் ஜாடைமாடையாகப் பேசியது அவள் காதில் விழுந்தது.

ஆதித்த கரிகாலரின் வீர, தீர பராக்கிரமங்களைப் பற்றி அறியாதவர்கள், ஆண்களிலோ, பெண்களிலோ தமிழகத்தில் யாரும் இல்லை.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## சோழ நாட்டு வீரச்சிறுவன்



கடல் அலையெனத் திரண்டிருந்த கூட்டத்தில் சிங்கமெனக் கர்ஜித்தான் கடோதகஜன். அவனது திண்ணிய தோள்களும், விம்மிப்புடைத்த மார்பும், வலிமைபொருந்திய கால்களும், தினவெடுத்த கைகளும், அனல் கக்கும் பார்வையும் அனைவரையும் அச்சமுறச் செய்தன.

கோதாவில் நின்று கொக்கரித்த அவனை எதிர்க்க யாரும் முன் வரவில்லை.

"மன்னா! உம்மிடம் மலைபோல் படையிருந்தும் என்னை எதிர்க்க எந்த மல்லனும் வரவில்லை. பார்த்தீர்களா என பராக்கிரமத்தை?" என்று இறுமாப்புடன் சொன்னான்.

மன்னன் வெட்கித் தலைகுனிந்தான். அதே நேரத்தில் "இதோ, நானிருக்கிறேன்," என்று கூட்டத்தில் ஒரு குரல் எழுந்தது. அனைவரும் திரும்பிப் பார்த்தனர்.

பத்து வயது சிறுவன் ஒருவன் திறந்த மார்புடன் வெளியே வந்தான்.

"ஏய் சிறுவனே, நீயா எனக்கு எதிரி? மூட்டைப் பூச்சியை நசுக்குவது போல் நசுக்கிவிடுவேன். உயிர் பிழைக்க ஓடிவிடு," எனக் கர்ஜித்தான் கடோத்கஜன்.

என்ன ஆச்சரியம்! கண் சிமிட்டும் நேரத்தில் பறந்து சென்ற சிறுவன், மல்லனின் தோள்களில் அமர்ந்து தன் வலக்கையை நீட்டி அவன் கழுத்தில் மின்னலாய் ஒரு வெட்டு வெட்டினான். அவ்வளவுதான்.

கடோத் கஜனின் கழுத்து நரம் பொன்று சுளுக்கி வலப்பக்கம் 45 டிகிரி கோணத்தில் முகம் பின்புறம் திரும்பிக் கொண்டது. அவனது விழிகள் சுழன்றன. கற்சிலையாய் அசைவற்று நின்றான்.

தோள்களிலிருந்து கீழே குதித்த சிறுவன் மல்லனின் இடது காலை வாரி அவனை மண்ணைக் கவ்வச் செய்தான்.

கூட்டம் ஆரவாரித்தது. சிறுவனைத் தலை மேல் தூக்கி வைத்துக் கூத்தாடியது.

யாரிந்தச் சிறுவன்?

உடலின் நரம்புகளின் ஓட்டம் அறிந்து இன்ன நரம்பைத் தட்டினால் இப்படி ஆகும் என்று கூறும் வர்ம சாஸ்திரக் கலை நிபுணர் வரகுணபதியின் மகன் கபிலன் தான் அவன்.

கடோத்கஜினின் மனைவியும், மக்களும் மன்னனிடம் மன்னிப்புக் கேட்க, சிறுவன் கபிலன் கழுத்து நரம்பில் மற்றுமொரு தட்டு தட்டிவிட்டு தலைக் கோணலைச் சரியாக்கினான்.

கடோத்கஜன் வெட்கித் தலைகுனிந்தான். அவனுடைய ஆணவம் அன்றோடு அழிந்தது. தான் அடிமைப்படுத்தி இருந்த ஆட்களை எல்லாம் அன்றே விடுதலை செய்து அனுப்பி வைத்தான்.

(முற்றும்.)

சுயமாற்றமே நாம் உலகிற்கு அளிக்கக் கூடிய உயர்ந்த பரிசு. – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# மலையகத்துப் பெருந்துயர் தீர்க்க எவரும் இல்லையோ

மலையகத்து கொத்மலைப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் (11) பேருந்து வண்டி விபத்துக்குள்ளானதில் 23 பயணிகள் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

அதிலும் தாயொருவர் தனது குழந்தையை நெஞ்சோடு அணைத்துக் கொண்டு, குழந்தையின் உயிரைக் காப்பாற்றி; தன்னுயிர் நீத்த நிகழ்வு தாய்மையின் உன்னதத்தை நினைந்து நெஞ்சுருக வைத்துள்ளது.

அதிலும் அன்னையர் தினத்தில் நடந்தாகிய ஒரு தாயின் தியாகம் இவ்வுலகம் அறியவும் பகிரவும் வேண்டிய முதன்மைச் செய்தியாகும்.

இங்குதான் நாம் மலையகம் குறித்து உன்னிப்பாக அவதானிக்க வேண்டியவர்களாக உள்ளோம்.

ஆம், இலங்கைத் திருநாடு இயற்கை அனர்த்தம் எதுவுமில்லாத புண்ணிய பூமி.

மனிதர்கள் வாழ்வதற்கான இயற்கையின் மிக உயர்ந்த கொடுப்பனவாக இருக்கக் கூடிய நாடு எது என்று கேட்டால், அது இலங்கை என்பதாகவே இருக்க முடியும்.

இருந்தும் மலையகத்தில் ஏற்படக்கூடிய இரு பெரும் அனர்த்தங்கள் எம் இதயங்களை கருக்கிவிடுகின்றன.

ஆம், மலையகத்தில் அவ்வப்போது ஏற்படுகின்ற மண்சரிவும் விபத்துக்களின்போது – பேருந்து வண்டிகள் 300 அடிகளைக் கடந்த பள்ளத் தாக்குகளில் வீழ்ந்து விபத்தை எதிர்கொண்டு அருமந்த மனித உயிர்கள் காவு கொள்ளப்படுவதும் பெருந்துயராகிவிட்டது.

உண்மை. மழை காலங்களில் ஏற்படக் கூடிய மண்சரிவினால் அருமந்த மனித உயிர்கள் மண்ணோடு புதையுண்டு போகின்ற கொடுமை தாங்க முடியாதது.

வீடு கட்டி குடி இருப்பதற்கு ஆன இடம் இல்லாத காரணத்தால், மண்சரிவு ஏற்படக் கூடிய இடம் என்று தெரிந்தும் அங்கு வீடுகளை அமைத்து வாழ வேண்டிய கட்டாய சூழ்நிலை மலையகத்தில் உண்டு.

எனவே இதுவிடயத்தில் அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுத்து சம்பந்தப்பட்ட மக்களைப் பாதுகாப்பான இடங்களில் குடியமர்த்தினால், மண்சரிவால் ஏற்படுகின்ற மனித உயிரிழப்புக்களை முற்றுறத் தடுக்க முடியும்.

இதேபோன்று மலையகத்தின் போக்குவரத்து வீதிகள் மிகவும் ஆபத்து நிறைந்தவை. எந்த நேரத்திலும் மிக மோசமான விபத்துக்கள் ஏற்படக்கூடியவை.

எனவே மலையகத்தில் இருக்கக்கூடிய, ஆபத்து நிறைந்த வீதிகள் தொடர்பில் மிக உயர்ந்த தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்தாக வேண்டும்.

இதைச் செய்யும்போது எந்தக் குறையுமின்றி மக்கள் வாழ்வதற்கான ஒரு புண்ணிய பூமியாக இலங்கை அமையும்.

இது விடயத்தில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க விரைந்து நடவடிக்கை எடுப்பார் என நம்பலாம்.

இனப்படுகொலைக்கான நினைவுத்தூபி

# தமிழரின் நீதிக்கும் உண்மைக்குமான பயணத்தின் ஓர் உறுதியான அடையாளம்

## கனேடிய தமிழர் பேரவை பெருமிதம்

கனடா பிரம்டனில் திறந்து வைக்கப்பட்டுள்ள தமிழர் இனப்படுகொலை நினைவுத்தூபி நீதிக்கும் உண்மைக்கும் தமிழர்கள் மேற்கொள்ளும் தொடர்ச்சியான பயணத்தின் உறுதியான அடையாளமாக அமைந்துள்ளது எனக் கனேடிய தமிழர் பேரவை தெரிவித்துள்ளது.

இது குறித்து கனேடியப் பேரவை வெளியிட்டுள்ள அறிக்கையில்,

பிரம்டனில் தமிழர் இனப்படுகொலை நினைவுச்சின்னம் திறக்கப்பட்ட வரலாற்று நிகழ்வு கடந்த சனிக்கிழமை (10) இடம்பெற்றிருந்தது. இலங்கையின் யுத்தத்தில் உயிரிழந்த பல்லாயிரக்கணக்கான தமிழீழ மக்களின் நினைவாக அமைக்கப்பட்டுள்ள இந்த நிலைவாலயத்தைக் கனேடியத் தமிழர் பேரவை ஆதரிக்கின்றது.

உலகம் முழுவதும் தமிழர்களுக்கான நினைவேந்தலின் மாதமாக அமைந்துள்ள மே மாதத்தை முன்னிட்டு இந் நினைவுச்சின்னம் நீதிக்கும் உண்மைக்கும் தமிழர்கள் மேற்கொள்ளும் தொடர்ச்சியான பயணத்தின் உறுதியான அடையாளமாக அமைந்துள்ளது.

இந்த வரலாற்றுச் சம்பவத்தை சாத்தியமாக்கிய பிரம்டன் நகர சபைக்கும் மேயர் பாட்ரிக் ப்ரவுன் அவர்களுக்கும் அனைத்து ஏற்பாட்டாளர்கள் மற்றும் நன்கொடைதாரர்களுக்கும் கனேடியத்தமிழர்பேரவை மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றது என்றுள்ளது. (ம-4,7)

23 உயிர்களை பலியெடுத்த

# கொத்மலை பஸ் விபத்து விசாரணைகள் ஆரம்பம்

(கொத்மலை)

23 பேர் உயிரிழக்கக் காரணமாக அமைந்த கொத்மலை - ரம்பொட பேருந்து விபத்து தொடர்பிலான துரித விசாரணைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

அதன் ஒருகட்டமாக நேற்று பேருந்தின் வழித்தடத்தில் பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்புக் கமராக்கள் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டது.

இதன்போது சாரதி சாரதி பேருந்தை ஆபத்தான முறையில் செலுத்தியமைக்கான சான்றாதாரங்கள் எவையும் கிடைக்கவில்லை என விசாரணைக்குழுவினர் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை நுவரெலியா மாவட்ட பிரதான மோட்டார் வாகனப் பரிசோதகர் ஜாலிய பண்டார தலைமையில் போக்குவரத்துத் திணைக்களத்தினர் முன்னெடுத்த ஆரம்பகட்ட பரிசோதனையில் இயந்திரக்கோளாறுகள் காரணமாக விபத்துச் சம்பவிக்கவில்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதன்படி அளவுக்கதிகமான பயணிகள் ஏற்றப்பட்டமை அல்லது சாரதிக்கு ஏற்பட்ட தூக்கக் கலக்கம் காரணமா விபத்து ஏற்பட்டிருக்கக் கூடும் என சந்தேகிக்கப்படுகின்ற நிலையில் மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.(ம-4,7)

கனடாவில் தமிழினப் படுகொலைச் சின்னம்

# உயர்ஸ்தானிகரிடம் அறிக்கை கோரிய இலங்கை அரசாங்கம்

(கொழும்பு)

கனடாவில் வசிக்கும் தமிழர்கள் சிலர் அந்நாட்டின் பிரம்டன் நகரில் விடுதலைப் புலிகள் அமைப்பின் ஈழ வரைபடத்தை உள்ளடக்கிய தமிழ் இனப்படுகொலை நினைவுச்சின்னம் ஒன்றை திறந்து வைத்துள்ளமை தொடர்பாக இலங்கை அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது.

அதன் முதற்கட்டமாக கனடாவிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகர் அலுவலகத்திடமிருந்து அறிக்கை ஒன்றை கோருவதற்கு தீர்மானித்துள்ளதாகவும் அறிக்கை கிடைக்கப்பெற்றதன் பின் இது குறித்து அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள எதிர்பார்ப்பதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. (ம-4,7)

# ஏறுமுகம் காண்கிறது ஏற்றுமதி வருமானம்

நாட்டின் ஏற்றுமதி வருமானம் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்துள்ளதாக மத்திய வங்கி அறிவித்துள்ளது.

நடப்பு ஆண்டின் முதலாம் காலாண்டில் மாத்திரம் ஏற்றுமதிகள் ஊடாக 3 ஆயிரத்து 347 மில்லியன் டொலர்கள் கிடைக்கப் பெற்றுள்ளது.

இது கடந்த காலாண்டுடன் ஒப்பிடுகையில் இது 5.3 வீத வளர்ச்சியாகும்.

ஆடைகள், புகையிலை உற்பத்திகள், உணவுப்பொருட்கள், தேங்காய்போன்ற பொருட்களின் ஏற்றுமதி ஊடாகவே இந்த வருமானம் கிடைக்கப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதே வேளை நடப்பு ஆண்டின் முதலாம் காலாண்டில் இலங்கையின் இறக்குமதி செலவு 4ஆயிரத்து 887மில்லியன் டொலர்கள் என்றும் தெரியவந்துள்ளது. (ம-4,7)

# கொழும்பு மாநகர சபையில் கோலோச்சப் போவது நாமே

## உறுதி படத் தெரிவித்தார் விஜித ஹேரத்

கொழும்பு மாநகர சபையில் தேசிய மக்கள் சக்தியே ஆட்சியமைக்கும். ஐக்கிய மக்கள் சக்தி குறைவான ஆசனங்களைப் பெற்றுள்ளதோடு மாத்திரமின்றி, அக்கட்சியின் மேயர் வேட்பாளர் தொகுதியிலும் தோல்வி அடைந்துள்ளார். எனவே, அவர்களால் கொழும்பு மாநகர சபையில் ஆட்சியமைக்க முடியாது என வெளிநாட்டலுவல்கள் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

கம்பஹாவில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டதன் பின்னர் இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொழும்பு மாநகர சபையில் ஆட்சியமைக்கப் போவது யார் என்பதையே பெரும்பாலானவர்கள் எதிர்பார்த்திருக்கின்றனர். கொழும்பு மாநகர சபையில் தேசிய மக்கள் சக்தியிலிருந்தே அதிகளவான உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றனர். 48 உறுப்பினர்கள் எமது கட்சியைச் சேர்ந்தவர்கள்.

ஆனால், ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து 29 உறுப்பினர்கள் மாத்திரமே தெரிவு செய்யப்பட்டிருக்கின்றனர். தொகுதியில் மேயர் வேட்பாளர் தோல்வியடைந்துள்ள நிலையிலும் மாநகர சபையில் ஆட்சியமைக்கப் போவதாகக் கூறுவதற்கு வெட்கமில்லையா? அவர்கள் முயற்சித்தாலும் அதற்கான வாய்ப்பே இல்லை. கொழும்பு மாநகர சபையில் தேசிய மக்கள் சக்தியே ஆட்சியமைக்கும் என்றார்.(ம-4,7)

# குஷ் போதைப்பொருளுடன் பிரிட்டன் பிரஜை கைது

குஷ்ரக போதைவஸ்துடன் இலங்கைக்குள் பிரவேசிக்க முனைந்த பிரித்தானிய பெண்ணொருவர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலைய அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று மாலை தாய்லாந்தின் பேங்கொக் விமான நிலையத்திலிருந்து இலங்கைக்கு வந்த குறித்தபெண்ணின் உடைமைகளை சுங்க சேவையின் போதைப்பொருள் கட்டுப்பாட்டு அதிகாரிகள் சோதனைக்குட்படுத்தியபோது அவரது பயணப் பையில் போதைப்பொருள் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

கைப்பற்றப்பட்ட போதைப் பொருள் தொகையின் மொத்த எடை 46 கிலோகிராம் எனவும் இதன் மதிப்பு சுமார் 460 மில்லியன் ரூபாய் எனவும் சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர். இதனையடுத்து குறித்த பெண் கைது செய்யப்பட்டதோடு சந்தேக நபரையும் போதைப்பொருள் தொகையையும் மேலதிக விசாரணைகளுக்காக போதைப்பொருள் ஒழிப்பு பணியகத்திடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதாக சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர். (ம-4,7)

# குருப்பெயர்ச்சிப் பலன்கள்

## 11.05.2025 முதல் 26.05.2026 வரை

65/100

## இரண்டில் வந்தது குருபகவான் இனிதே உயரும் வருமானம்

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



**ரிஷப இராசி நேயர்களே!**

இதுவரை உங்கள் இராசியில் சஞ்சரித்து வந்த குருபகவான், 11.5.2025 அன்று உங்கள் இராசிக்கு 2ஆம் இடமான தன ஸ்தானத்திற்கு வருகிறார். “இரண்டில் குரு வந்தால் திரண்ட செல் வம் வரும்” என் பார்கள். எனவே பொருளாதாரப் பற்றாக்குறை அகலும். புது முயற்சிகளில் வெற்றி கிடைக் கும்.

**குரு இருக்கும் இடத்தின் பலன்**

நவக்கிரகங்களில் சுப கிரக மாக விளங்குபவர் குரு பக வான். உங்கள் இராசிக்கு 8, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதி யானவர் குரு. அவர் இருக்கும் இடத்தை விடப் பார்க்கும் இடத் திற்கு பலன் அதிகம் கொடுப்பார் என்பது நியதி. எனினும் இந்த குருப்பெயர்ச்சி யின் விளைவாக சென்ற காலங்களில் ஏற்பட்ட இழப்புகளை ஈடு செய்ய வழி பிறக்கும். சிக்க னத்தைக் கடைப் பிடிக்க இயலாது. சுபவிரயங்கள் வந்து கொண்டேயிருக்கும். வாக்கு ஸ்தானம், தன ஸ்தானம் என்று வர்ணிக்கப்படும் 2ஆம் இடத்திற்கு குருபகவான் வரும் பொழுது வாக்கு வளம் சிறப்பாக அமையும். செல்வாக்கு அதி கரிக்கும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். கொடுக்கல்-வாங்கல்களில் சரளமான நிலை உருவாகும்.

**குருவின் பார்வை பலன்**

மிதுனத்தில் சஞ்சரிக்கும் குரு வின் பார்வை உங்கள் இராசிக்கு 6, 8, 10 ஆகிய இடங்களில் பதி கிறது. எனவே அந்த இடங்கள் எல்லாம் புனித மடைகின்றன. 6ஆம் இடம் என்பது எதிர்ப்பு, வியாதி, கடன் ஆகியவற்றைக் குறிக்கும் இடமாகும். அந்த இடத்தைக் குரு பார்ப்பது யோகம் தான். இது வரை எதிர்ப்புகளுக்கு மத்தியில் வாழ்ந்த உங்களுக்கு இனி நிம்மதி கிடைக்கும். ஆரோக்கியத் தொல்லை அகலும். உத்தி யோகத்தில் இருப்பவர்களுக்கு உயர்அதிகாரிகள் மூல மாக சில சலுகைகள் கிடைக்கலாம்.

குருவின் பார்வை 8ஆம் இடத்தில் பதிவதால் உடல்நலம் சீராகி உற்சாகத்தோடு செயற்படு வீர்கள். தொழிலில் ஏற்பட்ட இழப்புகளை ஈடுசெய்ய நண்பர்கள் உதவிக்கரம் நீட்டு வர். புண்ணிய தலங்க ளுக்கு சென்று வழிபட்டு வர வேண்டும் என்ற எண்ணம் நிறைவேறும். இடமாற்றம், வீடு மாற்றங்கள் எதிர்பார்த்தபடியே வந்து சேரும். வெளிநாடு செல்ல எடுத்த முயற்சி கைகூடும். பணிபுரியும் இடத்தில் கவனமாக இருப்பது நல்லது.

குருவின் பார்வை 10ஆம் இடத்தில் பதிவதால் தொழில் ஸ்தானம் மற்றும் கர்ம ஸ்தானம் வலுப் பெறுகிறது. எனவே இதுவரை தொழில் தொடங்க முயற்சித்தும் பலன் கிடைக் காதவர் களுக்கு இப்பொழுது பலன் கிடைக்கும். பெற்றோர் களின் உடல்நலம் சீராகும். கிளைத் தொழில்கள் தொடங் கலாமா என்ற சிந்தனை அதி கரிக்கும். வாடகைக் கட்டடத்தில் நடைபெற்ற தொழிலைச் சொந்தக் கட்டடத்திற்கு மாற்றும் முயற்சி கைகூடும்.

**நட்சத்திரப் பாதசாரப்படி பலன்கள்**

11.5.2025 முதல் 9.6.2025 வரை மிருகசீர்ஷம் நட்சத்திரக் காலில் செவ்வாய் சாரத்தில் குருபக வான் சஞ்சரிக்கும் பொழுது நன்மையும், தீமையும் கலந்தே நடைபெறும். உங்கள் ராசியைப் பொறுத்தவரை சப்தம விரயாதிபதி செவ்வாய் என்பதால் திடீர் வரவும், செலவும் உண்டு. வீடு மாற்றமும், தொழில் நிலைய மாற்றங்களும் கை கூடலாம். அயல்நாட்டு முயற்சி ஆதாயம் தரும். வருமானம் வந்து கொண்டேயிருக்கும் என்றாலும் சேமிக்க இயலாது. ஆடம்பரச்




செலவுகள் அதிகரிக்கும். 10.6.2025 முதல் 7.8.2025 வரை திருவாதிரை நட்சத்திரக் காலில் ராகு சாரத்தில் குரு பகவான் சஞ்சரிக்கும் பொழுது வாழ்க்கை வளமாக அமையும். வியாபாரம், தொழில் வெற்றி நடைபோடும். அதிகாரப் பதவியில் உள்ள வர்களின் ஆதர வோடு நல்ல காரி யங்கள் இல் லத்தில் நடைபெறும். எதிர் பார்ப்புகள் அனைத்தும் நிறைவேறும். இந்த நேரத்தில் பொருளாதாரம் உச்ச நிலையை அடை யும். திட்டமிட்ட காரியங்கள் திட் டமிட்டபடியே நடை பெறும்.

புனர்பூசம் நட்சத்திரக் காலில் சுய சாரத்தில் குருபகவான் சஞ்சரிக்கும் பொழுது 8.8.2025 முதல் 25.5.2026வரை நல்ல சந்தர்ப்பங்கள் நாடி வந்து சேரும். குடும்பத்தில் உள்ள விரிசல்கள் அகன்று உறவு பலப்படும். குடியிருக்கும் வீட்டை விலைக்கு வாங்கும் முயற்சி கைகூடும்.

**குருவின் அதிசாரப் பெயர்ச்சி**

8.10.2025 அன்று குருபக வான் கடக ராசிக்கு பெயர்ச் சியாகிச் செல்கின்றார். அங்கி ருந்து கொண்டு உங்கள் இராசிக்கு 7, 9, 11 ஆகிய இடங்களை பார்க்கிறார். குரு உச்சம் பெற்றுப் பார்ப்பதால் அந்த இடங்கள் புனிதமடைந்து, அற்புதமான பலன்கள் வரப் போகிறது. களத்திர ஸ்தானம் புனிதமடைவதால் கல்யாண முயற்சிகள் கைகூடும். வளர்ச்சி அதிகரிக்கும். உத்தியோகத்தில் ஊதியஉயர்வுடன் கூடிய இட மாற்றம் வரலாம். இதுவரை உங் களுக்குத் தொல்லை தந்த மேலதி காரிகள் இப்பொழுது மாற்றப் படுவர். கிளைத்தொழில் தொடங்க வேண்டும் என்ற எண்ணம் இப்பொழுது கை கூடும். தன்னம் பிக்கையும், தைரியமும் கொண்டு சாதனை நிகழ்த்த முன் வருவீர்கள். அயல்நாட்டு வணிகம் ஆதாயம் தரும். பெற்றோர்களின் மணி விழாக்கள், பிள்ளைகளின் மண விழாக்கள் நடைபெற்று மகிழ்ச் சியை வழங்கும் நேரமிது. குழந்தைகளின் எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் பலன்தரும் குழந்தைகளுக்கு படிப்பிற்கேற்ற வேலை அமை யவில்லையே என்று கவலைப் பட்டவர்களுக்கு இப்பொழுது நல்ல வேலை கிடைக்கும்.

**சனிப்பெயர்ச்சி**

6.3.2026 அன்று சனிபக வான் கும்பராசியில் இருந்து மீன ராசிக்கு பெயர்ச்சியாகிச் செல்கிறார். வாக்கியக் கணித ரீதியாக நடைபெறும் சனிப் பெயர்ச்சி இது. லாப ஸ்தானத் தில் சஞ்சரிக்கும் சனிபகவான் கிள்ளிக் கொடுக் காமல் அள்ளிக் கொடுப்பார். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். பணத் தட்டுப்பாடுகள் அகலும். மன திற்கினிய சம்பவங் கள் நடை பெறும் நேரமிது. பணி ஓய்விற்குப் பிறகும் ஒருசிலருக்கு பணிபுரியும் வாய்ப்பு உண்டு. ஆரோக்கியத்தில் மட்டும் சிறுசிறு அச்சுறுத்தல்கள் ஏற்படலாம்.

**பெண்களுக்கான பலன்கள்**

இந்த குருப்பெயர்ச்சியின் விளைவாக புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். புகழ்மிக்க வர்கள் உங்களுக்கு உறுது ணையாக இருப்பர். உத்தியோக மாற்றங்கள் உண்டு. கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப் படும்.

(தொடரும்)

## நாடு முழுவதும்...

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் கள் போதைப்பொருட்களுடன் சம்பந் தப்பட்டவர்கள் எனத் தெரிவிக்கப்பட் டுள்ளது.

அதன்படி, ஹெரோயின் போதைப் பொருளுடன் 114 பேரும் ஐஸ் போதைப்பொருளுடன் 141 பேரும் கஞ்சா போதைப்பொருளுடன் 100 பேரும் கஞ்சா செடிகளுடன் 05 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த விசேட சுற்றிவளைப்பு நட வடிக்கையின் போது 204 கிராம் 696 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருளும் 162 கிராம் 130 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருளும் 06 கிலோ 933 கிராம் 474 மில்லிகிராம் கஞ்சா போதைப்பொருளும் 31,454 கஞ்சா செடிகளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டதாகப் பொலிஸ் ஊட கப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (ம-7,4)

## ஊசி மூலம்...

காணாது வீட்டார் தேடியபோது இரவு 10.30 மணியளவில் தாயார் வீட்டுக்கு பின்புறமாக அசைவற்றுக் காணப்பட் டுள்ளார்.

சாவகச்சேரி வைத்தியசாலைக்கு உடனடியாகக் கொண்டு செல்லப் பட்டபோது அவர் ஏற்கெனவே உயிரி ழந்துவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள் ளது.

சடலம் நேற்று திங்கட்கிழமை (12) யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவா யம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார்.

பிரேதப் பரிசோதனையில் அள வுக்கதிகமாக போதைப் பொருளை ஊசி மூலம் செலுத்தியதால் மரணம் சம்பவித்ததாக அறிக்கையிடப்பட் டுள்ளது. (ம-7,4,30,60)

## ரூ.87 மில்லியன்...

கிடமான படகு ஒன்று அவதானித்து சோதனை செய்யப்பட்டது.

அங்கு படகில் எட்டுப் பொதிகளில் பொதி செய்யப்பட்டிருந்த 218 கிலோ கேரள கஞ்சாவுடன் படகையும் கடற் படையினர் கைப்பற்றினர்.

கடற்படையின் நடவடிக்கைகளால் படகைக் கரைக்குக் கொண்டுவர முடி யாததால், கடத்தல்காரர்கள் பேசாலை கடற்கரையில் படகுடன் கேரள கஞ்சா வினைக் கைவிட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

மேலும், கேரளக் கஞ்சாப் பொதிகள் மற்றும் படகு ஆகியன மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக பேசாலை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப் படவுள்ளதாகக் கடற்படை தெரிவித் துள்ளது. (ம-7,4,285)

## சுற்றுலாப்...

பேருந்து, மோட்டார் சைக்கிள் ஒன் றினை முந்திச் செல்ல முற்பட்ட போது, இடம்தரவில்லை என, மோட் டார் சைக்கிளில் வந்த மூவரும் பேருந்து சாரதியுடன் முரண்பட்ட நிலையில், பேருந்தின் கண்ணாடி களை அடித்து உடைத்து விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

குறித்த தாக்குதல் சம்பவத்தில் பேருந்தில் இருந்த இருவர் காயங் களுக்குள்ளான நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள னர்.

தாக்குதல் சம்பவம் தொடர்பில் பேருந்தின் சாரதி யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்த நிலையில் பொலிஸார் விசாரணை களை முன்னெடுத்துள்ளனர். (ம-7,4,33)

## இடப்பெயர்வு...

உரையாற்றும்போதே இவ்வாறு குறிப் பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், தெல்லிப்பழை பிரதேச செயலகத் தில் உதவி அரசாங்க அதிபராக நான் கடமையாற்றியிருக்கின்றேன். 1996ஆம் ஆண்டு நாம் இங்கு வந்த போது இடம்பெயராமல் தங்கியிருந்த தையிட்டி மக்கள் சிலரை இராணு வத்தினருடன் வந்து நான் பார்வை யிட்டிருந்தேன்.

அப்போது மயிலிட்டி உள்ளிட்ட இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக் குள் வீடுகள் அனைத்தும் நல்ல நிலையில் இருந்ததை நான் நேரடி யாகக் கண்டிருந்தேன்.

2015ஆம் ஆண்டு மாவட்டச் செய லராக யாழ்.மாவட்டத்துக்கு நான் வந்த பின்னர் மயிலிட்டிப் பகுதியை வந்து பார்வையிட்டபோது அதிர்ச்சி யாகவும் கவலையாகவும் இருந்தது.

நல்ல நிலையில் இருந்த வீடுகள் பலவும் இடித்து தரைமட்டமாக்கப்பட் டிருந்தன.

2015ஆம் ஆண்டு மாவட்டச் செய லராக நான் வரும்போது மாவிட்டபுரம் சந்தி வரையிலேயே முழுமையாக விடுவிக்கப்பட்டிருந்தன.

அதன் பின்னர் படிப்படியாக இங்கே மீள்குடியேற்றம் நடைபெற் றது. அன்றைய காலத்தில் யாழ். மாவட்ட இராணுவத் தளபதியாக இருந்த மேஜர் ஜெனரல் மகேஸ் சேன நாயக்க, தர்சன ஹெட்டியாராச்சி ஆகியோர் மீள்குடியமர்வு செயற்பாட் டுக்கு முழுமையாக ஒத்துழைத்திருந் தார்கள்.

அவர்கள் இன்னும் சில காலம் இருந்திருந்தால் மேலும் பல காணி களை எம்மால் விடுவித்திருக்க முடி யும்.

அடிக்கடி இராணுவத்தினரைச் சந்தித்து காணி விடுவிப்புக்கான கோரிக்கையை முன்வைத்தே இவற் றைச் சாத்தியமாக்கியிருந்தோம்.

தற்போது இங்கு வரும்போது இந் தப் பகுதிகளைப் பார்வையிடும்போது மிக்க மகிழ்ச்சியாக இருக்கின்றது என்றார். (ம-7,4)

## சங்கரின்...

காலமானார்.

வடமராட்சி கம்பர்மலையைச் சேர்ந்த செல்வச்சந்திரன் ஓய்வுபெற்ற ஆசிரியராவார்.

சங்கர் 1982ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27ஆம் திகதி விடுதலைப் புலி களின் போராட்டத்தின்போது வீரச் சாவடைந்தார்.

சங்கர் மரணித்த திகதியையே மாவீரர் நாளாக ஒவ்வொரு ஆண்டும் தாயகத்திலும் புலத்திலும் தமிழ் மக் களால்நினைவுகூரப்படுகின்றது. (ம-7,4)

## இணக்கம்...

நடைபெற்ற போராட்டத்தில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பி லேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், பருத்தித்துறை நகர சபை, வல் வெட்டித்துறை நகர சபை, சாவகச் சேரி நகர சபை ஆகிய 3 சபைகளி லும் தவிசாளர் பதவிக்காகத் தமது உறுப்பினர்களைக் களமிறக்கவுள் ளோம்.

ஏனைய கட்சிகளுடன் புரிந்துணர் வுகள் ஏற்படாதவிடத்து மற்றைய சபைகளில் அதிக வாக்குகளைப் பெற்ற தமிழ்த் தேசியக் கட்சிக்கு ஆதரவளிக்கவுள்ளோம்.

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்ட ணிக்கும் தமக்கும் இடையில் கொள்கை ரீதியில் இணக்கப்பாடு எட் டப்படுமாயின், அது தமிழரசுக் கட் சிக்கு அழுத்தத்தை ஏற்படுத்தும்.

தமிழ்த் தேசியம் சார்ந்த இணக் கப்பாடு என்பது முக்கியமானது.

இனத்தின் நன்மைக்காகவே தாம் இவ்வாறான விடயங்களை முன்வைப் பதாகவும் சுட்டிக்காட்டினார். (ம-7,4)

# பயங்கரவாதம் தொடர்ந்தால் பாகிஸ்தானுக்கு பதிலடி தொடரும்

## நாட்டு மக்களுக்கான உரையில் பாரதப் பிரதமர் மோடி



(டில்லி)

பயங்கரவாதம் தொடர்ந்தால் பாகிஸ்தானுக்கு பதிலடி தொடரும் என இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

பஹல்காம் தாக்குதலுக்கு பதிலடி யாக ஒப்பரேஷன் சிந்தூர் நகர்வு குறித்து இந்திய மக்களுக்கு பிரதமர் நரேந்திர மோடி நேற்று உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் கருத்துத் தெரிவித்த அவர்,

ஒப்பரேஷன் சிந்தூர் என்பது பயங் கரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் கொள்கை.

இந்தியாவின் ஏவுகணைகளில் இருந்து தப்பிக்க வழிபார்த்த பாகிஸ் தான் தோற்றுவிட்டது.

பயங்கரவாதிகளும் பயங்கரவாதி களுக்கு உதவி செய்பவர்களும் எங்களைப் பொறுத்தவரை ஒன்று தான்.

தாக்குதல் நிறுத்தப்பட்டாலும் எதிர்காலத்தில் பாகிஸ்தானின் நட வடிக்கையைப் பொறுத்து அடுத்த கட்ட முடிவு எடுக்கப்படும்.

இந்தியாவில் தயாரிக்கப்பட்ட ஆயுதங்கள் எதிரிக்குப் பதிலடி கொடுப்பதில் முக்கிய பங்காற்றின.

இந்தியாவின் ஏவுகணைகளில் இருந்து தப்பிக்க வழிபார்த்த பாகிஸ் தான் தோற்றுவிட்டது. போர் தற் காலிகமாகவே நிறுத்தப்பட்டுள்ளது.

பயங்கரவாதம் தொடர்ந்தால் பதி லடி தொடரும். நம்மைப் பொறுத்த வரை ஒற்றுமையே பலம், ஒற்று மையே முக்கியம் இவ்வாறு அவர் கூறினார்.

எனினும் இந்தக் கருத்துக்கு பாகிஸ் தானிடம் இருந்து எந்தப் பதில் கருத் துக்களும் இதுவரையில் வெளிவர வில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7,4)

## தையிட்டி...

யாழ். வலிகாமம் வடக்கு தையிட்டி யில் அமைக்கப்பட்டுள்ள விகா ரையை அகற்றுமாறு வலியுறுத்தியும் பொதுமக்களின் காணிகளை விடு விக்குமாறு வலியுறுத்தியும் நேற்று போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட் டது.

குறித்த விகாரை அமைக்கப்பட்டு, திறந்து வைக்கப்பட்டதிலிருந்து ஒவ் வொரு பௌர்ணமி தினத்திலும் இவ் விகாரையை அகற்றுமாறு கோரி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி யினர், காணியின் உரிமையாளர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் இணைந்து போராட்டத்தினை முன் னெடுத்து வருகின்றனர்.

நேற்று விசாக பூரணை தினத்தை முன்னிட்டு விகாரையில் விசேட பூஜைகள் நடைபெற்றுக் கொண்டி ருந்த வேளையில் இந்தப் போராட் டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தையொட்டி வடக்கு, கிழக்கில் பல பகுதிகளிலும் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டு வருகிறது.

ஒவ்வொரு ஆண்டும் மே 12ஆம் திகதி முதல் மே 18ஆம் திகதி வரை கஞ்சிவாரம் எனப் பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது.

அதற்கமைய நேற்று தையிட்டிப் போராட்டத்துடன் இணைந்ததாக முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட் டது.

குறித்த பகுதியில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரால் முள்ளி வாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது.

இதன்போது தமிழ்த் தேசிய மக் கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன் னம்பலம், செல்வராசா கஜேந்திரன் மற்றும் கட்சி உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.

இதேவேளை யாழ்.பல்கலைக் கழக மாணவர்களும் முள்ளிவாய்க் கால் கஞ்சி வழங்கினர். (ம-7,4)

## இணையம்...

லிகளில் யாரும் தங்கள் தனிப்பட்ட தரவை உள்ளிடக்கூடாது.

இலவச இணைய வசதியை (free wifi) வழங்குவதற்கு உங்களது OTP இலக்கத்தைப் பதிவு செய்யுமாறு சமூக ஊடகங்களில் பகிரப்படும் போலி விளம்பரங்களிடமிருந்து விலகி இருக் குமாறு பொலிஸார் தெரிவித்துள்ள னர்.

இவ்வாறான போலி விளம்பரங் களை நம்பி உங்களது OTP (One-time password) இலக்கத்தை அதில் பதிவு செய்ய வேண்டாம் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-7,4)

## யாழில்...

ஸ்ரீ நாக விகாரையில் வெசாக்கை முன்னிட்டு விசேட பிரார்த்தனைகள் இடம்பெற்றதோடு பொதுமக்களுக்கு அன்னதானமும் வழங்கப்பட்டது. (ம-7,4)

சுத்தமான, சுகாதாரமான முறையில் பறிக்கப்பட்ட தரமான வேப்பம்பூ கொள்வனவு செய்யப்படும்

கொள்வனவு விலை 1 Kg - 400/-

தேவைப்படும் அளவு 100 Kg



மொத்தமாகவோ அல்லது சிறு அளவிலோ கொள்வனவு செய்யப்படும் (C-2954)

தொடர்புகளுக்கு : 077 590 2467

கனடா - வரி இல்லாமல் விரைவு பொதிகள் சேவை

5-9 Kg 3970/-
11-16 Kg 2800/-
21-30 Kg 2640/-

- குறைந்த விலை -நிறைந்த சேவை
- கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
- 14 நாட்களில் Delivery

UK 11Kg - 1420/- France 11Kg - 2220/- Germany 11Kg - 2020/-
Swiss 11Kg - 2510/- Australia 11Kg - 1980/- Italy 11Kg - 2250/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

V2 TRAVELS 076 822 6241 076 822 6237 (C 2954)

## காணி விற்பனைக்கு

அரியாலை கிழக்கில் கடற்கரை ஓரமாக 10 ஏக்கர் நிலப்பரப்பும் கடற்கரையிலிருந்து 50m தூரம் அண்மித்ததாக 4 ஏக்கர் நிலப்பரப்பும் விற்பனைக்குண்டு. (4158)

077 491 3795

## விற்பனைக்கு

வீடு, காணி விற்பனைக்கு உண்டு. யாழ்.காரைநகர் பிரதான வீதியிலிருந்து 200m தூரத்தில் மானிப்பாய் சந்தியிலிருந்து 1Km தூரத்தில் 3½ பரப்புக்காணி குடியிருப்புச் சூழல், நன்னீர்க்கிணறு, காரைநகர் பிரதான வீதி அரசடிப் பிள்ளையார் வீதி. (4172)

077 638 5683/ 076 755 8606


## 3ஆம் ஆண்டு நினைவு



அமரர்

நீக்கிலாப்பிள்ளை பத்திநாதர் [மந்திரி]

((கே.கே.எஸ், சீமெந்து தொழிற்சாலை ஓய்வுபெற்ற அரசாங்க ஊழியர், ஓய்வுபெற்ற மின்னியல் இலத்திரனியல் என்ஜினியர்)

தோற்றம் 07.08.1941 | மறைவு 13.05.2022

"உயிர்ப்பும் உயிரும் நானே. என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்" (1126)

கனால் வீதி, மாதகல். 077 082 7349 ப.எட்மன்


50 ஆண்டுகால சேவையில்

E-Son's மேன்மை PARLOUR SERVICE

100 பேர் அமரக்கூடிய விசாலமான மண்டபம் (C-2907)

ஈ - சன்ஸ்

148, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

021 222 2695 / 077 429 0613


# மரண அறிவித்தல்

தோற்றம் 25 - 06 - 1982



மறைவு 09 - 05 - 2025

## திரு தில்லையம்பலம் ரஜீத்குமார்

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் சுவிஸ், பிரான்ஸ், மண்டைதீவு 6ஆம் வட்டாரம் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட தில்லையம்பலம் ரஜீத்குமார் அவர்கள் கடந்த வெள்ளிக்கிழமை (09.05.2025) அன்று இயற்கை எய்தி விட்டார்.

அன்னார் தில்லையம்பலம் நந்தினி தம்பதியரின் பாசமிகு தலை மகனும் சோபனாவின் அன்புக் கணவரும் மிரஜாவின் பாசமிகு தந்தையும் ரஞ்ஜித் மற்றும் சஹானா அவர்களின் ஆருயிர் அண்ணனும் சியாராவின் தாய்மாமனும் தேஜான் அவர்களின் அன்பு மைத்துனரும் இராசலிங்கம்-ஞானாம்பிகை , குமாரு - அன்னப்பிள்ளை ஆகியோரின் அன்புப் பேரனும் மகேந்திரன் - சுமதி தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற கலைவாணி மற்றும் சோதி, பவானி, ஜெகதா, சச்சிதானந்தமூர்த்தி ஆகியோரின் அன்புப் பெறாமகனும் வரதன், காலஞ்சென்ற கண்ணபிரான் மற்றும் காண்டீபன், பாலா , ஞானசவுந்தரி, புவனேஸ்வரி, புஸ்பராணி, ஆகியோரின் பாசத்திற்குரிய மருமகனும் ஜனார்த்தனன், சுயார்த்தனன், கோவர்த்தனன், ஈழவர்த்தனன், சங்கீதா, சுரேனுகா, கிரிஷிகா, மதுசூதனன், மியூசிகா, நடராஜ், நிரஞ்சனா, நித்தியா, நிதர்சனா, நிஷங்கன், சுரபி , அபிநயா, மதுநிதா, தீபிகா ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரனும் சங்கரி, சாம்பவி, தேவகி, உமையவள், பிரவிந், கவிந், கிருஷ்ணுகா, அபிசாந், கவிஷ்ணுகா, கௌரி, ராசன், ரவி, ரஜனி, சங்கர், பிரியா, ஜெயம், நகுலன், மேனகன், சுஜி, கேமா, மஞ்சுதன் ஆகியோரின் அன்பு மச்சானும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.05.2025) காலை 8 மணியளவில் மண்டைதீவில் இருக்கும் அன்னாரது அன்னை இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனக்கிரியைக்காக தலைக்கீரி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*தகவல் :* பாலமுருகன் (மாமா) - 0041 79450 4050
சுயார்த்தனன் (அண்ணா) - 0044 7476 2115 63
தனுஷன் (மச்சான்) - 077 874 8135

6ம் வட்டாரம்,
மண்டைதீவு. (4170)

# 75வது பிறந்த நாள் வாழ்த்து



Rev.சிமியோன்பிள்ளை சந்தாணப்பிள்ளை

Commissioner of God
Doctor of Divinity

ஜெப ஆலயம் - கிளிநொச்சி

தலைமைப் போதகர் என்று எல்லோராலும் அழைக்கப்படும் Pastor சந்தாணப்பிள்ளை அவர்கள் 75ஆவது பிறந்தநாளைக் கொண்டாடுவதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

இவர் தனது 52 ஆண்டு ஊழியப்பாதையில் வன்னி காடு மேடுகளெல்லாம் துவிச்சக்கரவண்டியில் வலம் வந்து எண்ணிலடங்கா ஊழியக்காரர்களையும் விசுவாசி களையும் கர்த்தருக்குள் வழிநடத்தியவராவார். 54 கிளைச் சபைகளுக்கு உரித்தானவர் இவர். நேரமுகாமைத்துவத்தையும் உண்மை பேசுதலையும் தன் அணிகலன்களாகக் கொண்டவர். எளிமையை எமக்குக் கற்றுத் தந்தவராவார். கடவுள் பணிக்கு வயது ஒரு தடையில்லை என்பதை எடுத்துக் காட்டியவர். தந்தையின் பணியை நோக்கும்போது இயேசு சமூகப்பணிகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்ததுபோலவே Pastor சந்தாணப்பிள்ளை அவர்களும் திருச்சபையில் திருப்பணியை மட்டும் ஆற்றாமல் சமூகப் பணியையும் ஆற்றி வந்தார்.

*அந்த வகையில்*

- 1983இல் இனக் கலவரத்தின்போது தெற்கிலிருந்து வந்த மலையக மக்களை கிளிநொச்சியில் பராமரித்து அவர்களுக்கான பணிகளையாற்றி வந்தார்.
- இலங்கை இராணுவத்தினருக்கும் போராளிகளுக்கும் இடையில் ஏற்பட்ட பல ஆண்டு களான யுத்தத்தின்போது மக்களுக்காகப் பணியாற்றினார்.
- இலங்கை - இந்திய இராணுவத்தினரின் யுத்தத்தின்போது மக்களுக்கான பணிகள். சுனாமி ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான சமூகப் பணிகள்.
- 2009 இறுதி யுத்தத்தின்போது (முள்ளிவாய்க்கால்) மக்களுக்கான சமூகப் பணிகள். 2009 "மெனிக்பாம்" நலன்புரி நிலையத்திற்குள் எவரும் செல்ல முடியாது என்ற சூழ்நிலை இருந்தபோதும் Pastor சந்தாணப்பிள்ளை அவர்கள் முதல் முதலாக நலன் புரி நிலையத்துக்கு வருகை தந்து மக்களுக்கு ஆற்றிய பணிகள் விபரிக்க முடியாது.
- 2010இல் மீள் குடியேறிய மக்களுக்கான சமூகப்பணிகள் கொரோனா நோய் காலப்பகுதியில் மக்களுக்கான பணிகள், பொருளாதார நெருக் கீடுகளின்போது மக்களுக்கான சமூகப் பணிகள் மற்றும் ஒவ்வொரு ஆண்டுகளிலும் ஏற்பட்ட இயற்கை அனர்த்தங்களின்போதும் மக்களுக்கான பணிகள்.
- தந்தை ஊழியப் பயணத்தின்போது சந்தித்த அவமானங்கள், குற்றச்சாட்டுக்கள் (போர்க்காலங்களில்) அவதூறுகளின் மத்தியிலும் இவற்றைக் கடந்து "நான் வலிகளைச் சுமந்து" இன்றும் இறைபணியாற்றி வருகிறார்.
- சபையில் இருந்து பிரிந்து சென்ற 65 ஊழியர்களை மீள சமாதானத்துடன் சபைக்கு வரவழைத்து அனுபவமிக்க முதிர்ந்த போதகர் ஒருவர் மூலம் அவர்களை ஆசீர்வதித்து காணிக்கைகள் கொடுத்து அவர்களை சமாதானத்துடன் அனுப்பி வைத்தார்.
- இன்றும் அயராது கடவுளின் பணிகளையாற்றிவருவதையிட்டு அனுபவங்கள் நிறைந்த ஓர் நல்ல மேய்ப்பரை நாம் பெற்றதையிட்டு மந்தைகளாகிய நாம் மகிழ்ச்சியடைகின்றோம்.

Happy Birthday To You

வாழ்த்துவோர் :- பிள்ளைகள், போதகர்கள், விசுவாசிகள்
தலைமைச் சபை, ஜெப ஆலயம் - கிளிநொச்சி

(1128)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.05.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.